[illegible]

ப்ரம்மவித்தியா பத்திரிகை.

மாதம் ஒருமுறை பிரசுரஞ் செய்யப்படும்.

[illegible] ... ம். } சிதம்பரம்:—சர்வஜித்து வருஷம் கார்த்திகை மீ ௧௫-உக்கு
௧௮௮௭ வருஷம் நவம்பர் மீ ௩௰-உ புதன்கிழமை.

[illegible]

[illegible]

கிறிஸ்துமதத்தைத் [illegible]

கிறிஸ்துமதம் ஓர் மதமல்லவெ[illegible]
ஷயமே. ஆயினும் அம்மதம் வி[illegible]
பணம், தந்திரம், யுத்தம், [illegible]
முதலானவையே. வி[illegible]ங்களை நுட்[illegible]
ன்கள், தங்களைக் கிறிஸ்தவரென்று [illegible]
ப்படுவார்களென்பதிலையமின்று. கிறி[illegible]
மிடத்து, பைபிலின்படி ஒரு மனிதன்[illegible]
றும் பொய்யாகின்றது. ஐரோப்பியரே[illegible]
றியிருக்கின்றார்கள். இப்படியிருக்க அ[illegible]
க்கும் பிறப்பிடமான இத்தேசத்தில் ப[illegible]
க்கண்டிக்காமல் நமக்கென்னவென்றிரு[illegible]
லாத மனிதனை உண்டென்று ஸ்தாபித்[illegible]
கடவுளென்று கூறி, அதோடு அதை ப[illegible]
கொண்டு இவ்விடத்தில் வந்து போதி[illegible]
அழைத்தால் புத்திகெட்டு அதில் போ[illegible]
தடுக்காமலிருக்கலாமா! நமது தேசத்[illegible]
வா! இதைச் சிந்திக்கும் ஆண்பிள்ளைக[illegible]
மே பேடிகளா! பணக்காரர் என்னசெ[illegible]
கள் தூங்குகின்றார்களோ! மடத்தார் [illegible]
களோ! மதாபிமானிகளெங்கே! மத[illegible]
வரப் பயப்படுகின்றார்களோ! அவர்கள்[illegible]
த்திரம் கண்ணுயிருக்கின்றார்களா! ஒ[illegible]
யுள்மதச் சண்டைபோட்டுப் பிறரையு[illegible]
ச் சுகமாய் வாழ்கின்றார்களா! வடகலை[illegible]
டிபோட்டு யுத்தம் செய்கின்றார்களா!
ஸ்துமதத்தைத் தொலைக்க எழும்பப்ப[illegible]
படிப்பட்ட எண்ணமுதிக்குமோ! எத்[illegible]
ள்ளைகளைப் பறிகொடுத்துத் தவிக்கின்றா[illegible]
கள் புருஷனையிழந்து கண்ணீருங் கம்ப[illegible]
றார்கள்! எத்தனை குடும்பங்கள் பந்து[illegible]
கின்றார்கள். மாமிசம் தின்னாத எத்த[illegible]

[illegible]

ட்டுக்கறி, பன்றிக்கறியைத் தின்றுகொழுப்பாதகர்[illegible]ர்கள்! இவற்றையெல்லாம் சிந்திக்கும் ஜீவகாருணியமுள்ள[illegible]ில் லையா! பாதகரான பாதிரிகள் துன்மார்க்கத்தை[illegible]ப்ப டாதா! அவர்கள் பிரசங்கத்தை ஊரூராய் நம்மவர்[illegible]பிக் கண்டிக்கப்படாதா! கிறிஸ்துமத மலஊற்றில் வீழ்ந்[illegible]ரும் சாசாதபடி எல்லோரும் சங்கணம் சட்டிக்கொள்ள[illegible]ாதா! டைபிலிலுள்ள துன்மார்க்கங்களை வெட்ட வெளியாய்[illegible]ற்றி, அதில் வெறுப்புவரட்டண்ணப்படாதா! கிறிஸ்துபாடசாலை[illegible]ல் நமது அருஞ்செல்வப் புத்திரர்களை விடாமலிருக்கப்பட[illegible] அதிலும் பெண்மக்களை அவர்கள் முகாலோடனமும் செய்[illegible] விருக்க முயலப்படாதா! டணமுள்ளவர் மற்றைத்தருமங்களை யெல்லாம் சுருக்கி ஆண் பெண் பாடசாலைகளை ஏற்படுத்தி[illegible] து சமயங்களையும் போதிக்கப்படாதா! ஆனகிறிஸ்தவன[illegible] இந்துசமயி ளாக்கப்பட்டாதா! இதுசிற்சு; இப்படிப்பட்[illegible] சாரிகளுக்குப் டணம் செல்வழிக்காமல் இதரவிஷய[illegible] யேன்மேலும் டணததைக் கொட்டுவதில் டயனில்லை[illegible] லத்தில கிறிஸ்துமதத்ததை வேரோடுகளைந்து இந்[illegible] நிலைநாட்டுவதைவிட வேறு புண்ணியமில்லையெ[illegible] ய்க் கூறலாம்.

நன்மைதா[illegible]

—:O:—

அமிர்தபஜார்பத்திரிகை.

"விதர்ப்பதேசத்திலே அகோலாவென்னும் ஓர்நகரமிருக்கின்றது. அவ்வூரில் அதி சமீபகாலத்தே ஓர் சபாஜம் சேர்ந்தது. அங்கு கூடியிருந்த கனவான்களால் அடியிற்கண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

1. ஏழுவயது செல்வதற்கு முன் பெண்களுக்கு விவாகம் செய்யக்கூடாது.

2. ஸ்திரீ புருஷர்களுள் குறைந்தது ஆறுவயதாயினும் மேற்பட்டிருப்பவனே கணவனாகவேண்டும்.

3. முதன்மனைவியிருக்கும்பொழுது அவளுக்குப் புத்திரப்பேறின்மை, அல்லது மிகுந்த பிணியுடைமை இத்தகைய காரணங்களாலன்றிப் பிறிதெக்காரணத்தினாலாவது, உள்ள மனைவியைத்தள்ளிப் பின்னொருத்தியைமணம்புரிதல்கூடாது. நாற்பது வயதுக்கு மேற்பட்ட எந்தப்புருஷனும் எந்தக்காரணத்தினாலேனும் விவாகஞ்செய்துகொள்ளலாகாது.

இங்ஙனம் எமக்குப் பிரியமான சங்கதியைக் கர்னூடப்பிரகாசிகையென்னும் பத்திரிகை வெளியிடுகின்றது. இவ்வாறு காலோசித பரிஷ்காரஞ் செய்பவரை நாம் பலவாற்றானும் அநுமோதிக்கவேண்டும். ஏனெனில், அவர் கொண்டது நன்னோக்கம். அவர் முயற்சி நியாயத்தை யநுசரித்தது. அவர்கள் சர்வஞ்ஞன மனு உணர்த்தியருளிய தருமசாஸ்திரத்தின் கருத்தையே வெளியிட முயன்றுவருகிறதாய்த் தெரிகின்றது. ஆயினும் இவ்விடம் நாம் சொல்லவேண்டிய தொன்றுண்டு. அதாவது பத்தாவது வயதுவரையில் அல்லது வங்கதேசத்தில் நடப்பதுபோலப் பன்னிரண்டு அல்லது பதின்மூன்று வயதுவரையில் விவாகஞ்செய்யலாமென்று ஜனங்கள் ஒப்பி ஓர் ஏற்பாடு செய்வார்களானால் அது மிக நன்மையாம். இவ்விஷயம் முற்கூறிய சங்கத்தாருக்கு உடன்பாடோ, அல்லது விரோதமாமோ என்பது தெரியவில்லை. இதுவிஷயத்தில் நமதபிப்பிராயத்திற்கிணங்கிய கர்னூடப்பிரகாசிகாபத்திராதிபர் "இவ்விதம் ஆரம்பித்தவர்களே இதன் முடிவைச் சொல்வார்கள்" என்று நன்றாகத் தமதபிப்பிராயத்தை வெளியிடுகிறார். ஆயினும், இவ்வளவு அச்சங்கத்தார் செய்ததற்காக நாம் அவரிடம நன்றியுள்ளவராயிருக்கிறோம்."

ஆரியமதபதுமானி.

[மொழிபெயர்ப்பு]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ப்ரம்மவித்தியா

சிதம்பரம்: ௧௮௭௮-ளூ நவம்பர்மீ ௨௰-உ புதன்கிழமை.

நம்மவரும் மடத்தாரும்.

நம்தேசத்தில் முன்னரவதரித்து மதாசாரியர்களெனப் பெயர்வகித்த ஸ்ரீமத் நீலகண்டசிவாசாரியர், ஸ்ரீமத் சங்கராசாரியசுவாமிகள், ஸ்ரீமது ராமாநுஜாசாரியார், ஸ்ரீமது ஆனந்த தீர்த்தர், ஸ்ரீவல்லபாசாரியார் முதலாயினோர் அவ்வக்காலத்து, இந்துமதத்திற்கு மாறாக எழுந்த புறமதங்களையும், அவற்றால் நம்மவர்க்கு நேரிட்ட பிரபலாநிஷ்டங்களையும் பலவித கஷ்டங்கள்பட்டு அகற்றி, நமது மதத்தை நிலைநாட்டினார்களென்று நாமெல்லோரும் அறிந்திருக்கிறோம். அக்காலத்தில் அவர்கள் தங்கள் சரீரசுகத்தை முற்றிலுந் துறந்து, பற்பல முயற்சிகளால் உயர்ந்த கீர்த்தியையும் அடைந்து நம்முன்னோர்கள் கொண்ட மதாசாரங்களை நிலைநாட்டி உலகத்திற்குபகாரம்புரிந்து பரம்பொருளை வழிபட்ட தன்கருணையால் உண்மைப்பொருளை உலகத்தாருள்ளத்தில் விதைத்து நம் தேசத்தில் நிலைபெற்ற பௌத்தர்முதலிய நாஸ்திகர் மதங்களை வேரறுத்து நமது தேசத்திற்குப் பலவித சுகங்களைத் தேடிவைத்தார்களென்பதும் நாம் அறிந்தவிஷயமே. அவர்கள் இவ்வுலகத்தைத் துறந்து பரலோகமேகும்பொழுது தாம் ஸ்தாபித்த மதத்தின் உண்மையை ஒருநாளும் அழியாமற்காக்கத்தக்க நாவன்மைபெற்ற சிஷர்களை, பற்பலவிடங்களில் பற்பல மடங்களையமைத்து அவைகளில் இருக்கச்செய்து உலகத்திலுள்ள தமது சிஷர்கள் எக்காலத்தும் தமது ஏற்பாட்டிலிருக்கும்படிக்காகவும் அந்த வருணாசிரமங்களுக்குரிய தருமங்களை நிலைபெறச்செய்யவும் அவ்வித கருமம் நிறைவேறவேண்டி ஆங்காங்கு ஒவ்வொரு தேவதைகளை ஆராதிக்கவும் இவர்கள் அந்தந்தக்காலங்களில் நமது தேசத்திற்குண்டாகும் புன்மத உபத்திரவங்களை அகற்றவும் அவர் செய்யவேண்டிய காரியங்களைக் குறிக்கும் விருதுகளை அவர்களுக்கேற்படுத்தி, தாம் பரலோகமடைந்தார்கள். ஆதலால் இவ்விந்துதேசத்தில் விளங்கும் ஒவ்வொரு மடாதிபதிகளும் செய்யவேண்டியது வித்தியா பரிபாலனமும் மதபரிபாலனமுமன்றோ? அவ்விதத் தொழிலை அம்மடங்களில் அபிஷேகம்பெற்ற முன்னாசிரியர்கள் செய்தே முடித்துவந்தார்கள். அக்காலத்தில் அதுவே அவர்களுக்கு முக்கியமான காரியமாயிருந்தது. பின் அத்தானங்களுக்கு வாய்த்த அவ்வாசிரியர்கள் ஏதோ ஒரு காலவிபரீதத்தால் உண்மதச்சண்டைகளில் பணத்தைப் போக்கி, அதிகாரமற்றவர் ஆசனத்தைப் பெற்றதாலோ, தம்மவரென்னும் அபிமானத்தால் தம்மவருள் வைத்த பக்ஷபாதத்தாலோ, பொருள் சம்பாதித்தலில் விளைந்த பேராசையாலோ, தமது சரீரசுகத்தில் மிக விருப்பங்கொண்டதனாலோ, எல்லையற்ற அகந்தையாலோ, மடமையே குடிகொண்டதனாலோ, மற்றெக்காரணத்தாலோ தம்மை நியமித்த ஆசிரியர் கருத்துக்கு நேர்மாறாக முன்னோர் வழியை முற்றிலும் ஒழித்துப் பற்பலவழிகளால் பொருளைப் பறித்து அவற்றால் தமது போக்கியங்களை நினைத்து, தாம் செய்யவேண்டிய வேலைகளைச் சிறிதுங் கவனியாது பல லௌகிகவிவகாரங்களில் மனத்தைச் செலுத்

[illegible]

திக் காலங்கழித்துவருகிருர்கள். அந்தோ! இஃதென்ன விபரீதம்!! நமது மதத்திற்கு உண்டான ஓர் துரதிர்ஷ்டத்தைப் பார்த்தீர்களா! இவர்கள், தமது சரீரசுகத்தை லட்சியஞ்செய்யாமல் உயிரைத் துரும்புபோல் மதித்து உண்டியுறக்கமற்று இம்மையில் உள்ள வாழ்வை ஒழித்து லோகோபகாரமே ஞானிகள் விவகாரமென்றுகொண்டு நமது மதத்தைக் காததலே தமக்கு மிக்க தருமமென்று கருதி பலர் கொண்டாடப் பதம்பெற்ற இந்துமதாசாரியர்களின் வித்தியாவம்சத்திற் பிறந்தும், தாம் செய்யவேண்டியது இன்னதென்று சிறிதும் சிந்திக்கின்ருரில்லையே! இக்காலத்து இந்துக்களுட் சிலர், இந்துக்களின் குலத்திற் பிறந்தும் இந்துக்களிடத்து வளர்ந்தும் இந்துதேசத்தில் வசித்துக்கொண்டிருந்தும் தம் நிலைமையை முற்றிலும் மறந்து தேசாபிமானமற்று மேலோர் சன்மார்க்கநெறி கடந்து அளவில்லாப் பாவங்களைச் செய்து தம்மதத்தைத் தாமே நிந்தித்து ஆரியர் குலதனமான சம்ஸ்கிருதபாஷையை ஆதரிக்காது அன்னியர் பாஷையை மேன்மையுடையதெனப்பேசி அனேக விஷயங்களில் அன்னியர் நடைகளையே கொண்டு அவர்போலத் தாமும் ஆகவேண்டுமென்று பாடுபட்டு நமது முன்னோர் ஏற்படுத்திய ஆசாரங்கள் சுகந்தராது துன்பம் விளைக்கின்றதென்று நேர்ந்தவாறு பிதற்றிப் பெரியோரைத் தூஷித்து வேதங்களையும் பரிகசித்துவருகின்ருர்கள். ஆசாரியர்களெவ்விதமாகச் சிஷ்ர்களிவ்விதமாயினர்! அதுமட்டோ! பின்னுங் கேண்மின்! குருக்கண்மாரிடத்தே குருலக்ஷணமுமில்லை; சிஷ்ர்களிடத்தே சிஷ்யலக்ஷணமுமில்லை. இங்ஙனமிருக்க; "அறுக்கமாட்டாதவன் இடுப்பில் ஐம்பத்தெட் டரிவாள்" என்டதுபோல ஒவ்வொரு மடாதிபர்களுக்கும் முன்னுசிரியர்களிலும் அதிகமான விருதுகள் உண்டாயின. அவருள்ளே சிலர், நாம் ஜகத்குருவாகுமென்ன, வேறு சிலர் நாமன்ருே ஜகத்குருவெனவும்; சிலர், நாமே சைவசித்தாந்தாசாரியரென்ன, வேறுசிலர் தாமென்னவும்; சிலர், நாமே இத்தருமத்தை நடாத்தும் அதிகாரமுடையேமென்ன, மற்ரெருவர் அதற்குரியார் நாமென்னவும் ஒருவர்க்கொருவர் சண்டைசெய்து தம் மடத்தையடுத்த சில பாமரஜனங்களால் கலசங்களையே மிக உண்டாக்கி வருகின்ருர்கள் இதுதானே முற்காலத்தாசிரியர்கள் கருத்து? அவர்கள் கொண்ட கருத்துகளுக்கெல்லாம் நேர் மாருக இவர்கள் நடக்கின்ருர்களே! இவர்களுள் ஒற்றுமையில்லாமையும், இவர்கள் தமது வேலையை மறந்ததும், இவர்களைப்பிடித்த டணப்பேராசையும், இவர்களுக்குப் பெயர்மாத்திரையால் வாய்த்த ஆசாரியத்தன்மையும் ஆகிய எல்லாங்கூடி முடிவில் நம்மவர் மதத்திற்கு ஓர் பெரும்அபாயத்தை விளைவிக்கின்றதே! நம்மதமானது புத்திமான்கள் பலராலும் போற்றத்தக்கதாயிருந்தும் இந்நிலைமை அதற்கு வந்ததற்குக் காரணம் நமது அநாதரவேயன்றி வேறுண்டோ! நம்முன்னோர்களெல்லோரும் இவ்வாசாரிய மடாதிபதிகள் எவ்விடத்திலும் நமது மேன்மையான மதங்களை ஸ்தாபித்து நமது தேசக்ஷேமத்தை நிலைநாட்டுவார்களென்று நம்பியே அவரது ஆணைக்கடங்கித் தமது சுகத்தை லட்சியஞ்செய்யாமல் மதாசார விஷயங்களுட் சம்சயம் நேர்ந்தால் அவர் சொல்வதையே அவ்விஷயத்திற் பிரமாணமாகக்கொண்டு வெகுகாலம் பரமானந்தமடைந்தனரே. அதுகொண்டேயல்லவா அவர் தாமறிந்த வித்தையின் பயனை எங்கும் விதைக்காமல் தம்மையடைந்த சிலருக்கே உபதேசித்துவந்தார்கள்! உலகத்தி

[illegible]

லே மதாசாரியர்களென அதற்காக ஏற்பட்டவர்களே மதபரிபாலனஞ் செய்பவர்களென்றன்றோ அவர் எண்ணியிருந்தனர்! தம்மாசிரியர்கள் செய்யவேண்டியவற்றைத் தாம் செய்தல் முறையன்றென்றே அவர்கள் மௌனஞ்சாதித்தார்கள். இங்ஙனம் வித்துவான்கள் மௌனஞ்சாதித்ததையும், மடாதிபதிகள் வயிற்றைவளர்த்துக்கொண்டு வாளா நாட்கழிப்பதையும் கண்ட மேற்றிசைப் பாதிரிமார், தருணம்பார்த்து நம்மவர் மதாசாரங்களைப் பலவாறு கெடுத்துவிட்டனரோ! நமது மதம் இப்படிப்பட்ட கதியை அடைந்திருக்கின்றதென்பது இன்னும் மடாதிபதிகள் புத்தியில் சிறிதும் படவில்லையே! எக்காலத்தும் அவர்க்குச் செல்வமும் சரீரசௌக்கியமும் குறைவுபடாதிருத்தலினாலல்லவா அவர்கள் இதிற் சிறிதுங் கவனஞ்செலுத்தவில்லை! இவ்வித நிலைமை மதத்திற்குச் சம்பவித்திருப்பதைச் சிலர் அறியவேயில்லை. சிலர் அறிந்தும் பொருளாசையால் அவ்வாபத்தைத் தடுக்க முயல்கின்றார்களில்லை. மற்றுஞ் சிலர் பொருளையும் பாதுகாவாது பல உட்சண்டைகளால் அதையும் நாசப்படுத்துகின்றார்கள். தேசாபிமானிகளே! மதாபிமானிகளே! சற்றுக் கேண்மின்! இக்காலத்திலோ வைதிகநெறி குன்றிவருகின்றது; நாத்திகம் ஓங்கத் தலைப்படுகின்றது. சருமங்களோ பெரிதும் ஒழிந்துபோயிற்று. அந்தோ! பண்டிதர் படுத்துறங்குகின்றனரோ! ஓர் மடாதிபதியும் கண்விழிக்கக் காணோமே! என்செய்வோம்! அவாகள் பிரமானந்தநிஷ்டையை மாற்றி, அதற்குப் பதிலாகப் பொற்சிவிகைப்பவனி, பீதாம்பரமுடுத்தல், பொற்பணியணிதல், இரத்தினகுண்டலந் தரித்தல், மணிமுடி புனைதல் முதலியவற்றால் பேரானந்தவெள்ளம்பொங்கி, தம்மை மறந்து, ஏனோர் கஷ்டத்தையும் மதத்தின் கேட்டையும் சிறிதுங் கவனியாது மடங்களின் ஓர் மூலையிலே உட்கார்ந்து காலங்கழிக்கின்றனரோ! இந்துக்களே! இவர் இவ்வாறு சுகமநுபவித்துக்கொண்டு நன்றாய்ப் படுத்துறங்கத்தானா நம் முன்னோர்கள் தம் பிராணனையும் லக்ஷியஞ்செய்யாது அரும்பாடுபட்டுத் தேடிய பெரும்பொருளையெல்லாம் இவர்க்குப் பங்கிட்டுக்கொடுத்தார்கள்? நமது மதங்களுக்கு வருங் குறையை நீக்குவாரென்றல்லவா? அவ்வாறு இம்மடாதிபதிகள் ஏதேனுஞ் செய்கின்றனரா? மேற்றிசைப் போதகர்கள் செய்யும் பெருமுயற்சியைப் பார்த்தீர்களா! அவர்கள் ஒவ்வொரு பட்டணங்களிலுங் கிராமங்களிலும் சிறு குப்பங்களிலும் புகுந்து புகுந்து, பொய்யே வடிவானதும், மூடர்களே கொண்டாடத்தக்கதும் கீழ்மக்களுக்கெனவே ஏற்பட்டதும் பல அனியாயங்கள் நிறைந்ததுமான யேசுமதமென்னும் ஓர் மதத்தை எங்கும் பரவச்செய்துப், ஜனங்களைப் பற்பல உபாயங்களால் மோசஞ்செய்தும், அனேக பத்திரிகைகளை வெளியிட்டும், நமது மதத்திலுள்ள குணங்களையே ஆபாசமாகக்காட்டி மற்றவரைப் பகட்டியும், தம்மதங் கொண்டவர்க்கு உத்தியோகங் கொடுத்தும், ஆங்காங்கு கோவில்களைக் கட்டியும், இந்துக்களின் ஆலயங்களில் நடக்கும் உற்சவாதிகளில் பல கெடுதிகளைச் செய்தும், நம்மவருள் செல்வக்குறைவைக் கண்டுணர்ந்து பொன் பெண் முதலிய பல கருவிகளால் அரசர்கள் நால்வகையுபாயங்களால் வெல்வதுபோல் மற்றவரை மாயவலையில் சிக்கச்செய்து, கீழ்மக்களேனும் ஓர் கிறிஸ்தவன் கிடைத்தால் போதுமென்றும், பின் கீழ்மக்களெல்லாம் அம்மதங்கொண்டால் அப்பால் அவர்களைக்கொண்டு எவ்விதத்திலும் மற்றவர்களையுங் கிறிஸ்தவராக்கிவிட

[illegible]

லாமெனனுந் துரபிப்பிராயங்கொண்டும் எங்குபார்த்தாலும் திரிகின்றனரோ! இஃதென்ன கொடுமை! இதுசாறும் நமது மதத்திற்கு இவ்வித ஆபத்துச் சப்டவித்ததேயில்லை. ஆயின், முன்பு மகமதியர் சும்மதத்தைக் கொள்ளும்படி பலவாறு நிர்ப்பந்தஞ்செய்யவில்லையோவெனில், அககாலம் அவர்கொண்ட அபிப்பிராயம யாவரும் நன்ருயறிந்தக்கதா யிருந்தமையாலும அரசினரும் அதற கிடங்கொடுத்திருந்தமையாலும் அவ்விஷயத்தில் வேண்டிய முயற்சி நம்மவர் எடுத்துக்கொண்டார்கள். இப்பொழுது அரசினர் அவ்வளவு ஆதரிக்காதுபோனபோதிலும் இவர் செய்யுங் கொடுமைசள் எல்லோரும் அறியும்படி செய்யப்படாமையினுல், அதைத் தடுக்க முயல்வோர் மிகச் சிலராயினர். இவ்வாறு நமது மதத்திற்குண்டான தீமையை ஓர் டண்டிதரேனும் ஓர் மடாதிபதியேனும் அறியவும் சவனிக்சவுமில்லையே! அறிந்தாலும் சிலர் லக்ஷியஞ்செய்வதேயில்லை. சிலர் உதாசீனமாக இருககிருர்கள். இங்ஙனம் நமது பண்டிதரும் மடாதிபதிகளும் கண்மூடிக்கொண்டிருப்பது அவர்செய்த பாசகியமே. அன்றி, இக்காலத்தில் வைதிகசிரத்தையோ படிப்படியாய்க் குறைந்துவருகின்றது. உற்றுநோக்கில் சிலர்மட்டும் டமைபமாதிரியில் வித்தைகளை யப்பியசித்து நமது மதவுண்மைகளை அறிநதிருக்கின்றூர்கள். அவர்களும் இக்காலத்தில் மதத்திற்கு வரும் ஆபத்தை நிவிர்த்திக்காமற்போனுல், இனி யாவர்தான் வந்து செய்வார்கள்! இனிப் பிறக்கும் நம்மவர் நமதுமதக்கொள்கைகளை அன்னியர் தாறுமாருய் மொழிபெயர்த்த புஸ்தகங்களிற் கண்டு நம் மூனனோர் கருத்துககு நேர்மாருகவே தப்பரியங் கொள்வார்களென்பதில் தடையில்லை. புன்மதப் பெருவெள்ளம் பெருக்கெடுத்துவருகின்றது! இப்பொழுதே அதைத் தடுத்துக கரைபோட்டுவிடவேண்டும்! அந்தோ! பெரியோர் குலங்களிலும் அத்துர்மதப் பெருவெள்ள ஊற்றங் காண்கின்றதே! சிற்சில நம்மவரோ நம்மவர்களுக்கு மதத்தைக் காக்கவேண்டிய பொதுவேற்பாடு ஒன்றுமில்லையென்றுசொல்லுகிருர்கள். மடாதிபதிகள் ஏற்பட்ட வேலையைச்செய்யாததினுல் அங்ஙனம் சொல்ல நேர்ந்தது. மேற்றிசையார்க்குற்ற பலமெல்லாம பணமேயன்றி வேறில்லை. அப்பலம நம்மவர்க்கில்லை. அஃதின்றி ஒன்றும் நடவாது. ஆகலால், அதன்பொருட்டு ஓர் பொதுநிதி சேகரித்து அதற்கென்று ஓர் சபை ஸ்தாபித்து பலவிடங்களிலே பல கிளைச்சபைகளை உண்டாக்கி ஆங்காங்கு மதவாராய்ச்சியின் வல்ல பண்டிதர்களைக்கொண்டு புன்மத ஆபாசங்களைத் தூற்றி நன்மத உண்மைகளைப் போதித்து விருத்திசெய்துக்கொண்டு வந்து இம்மட்டிலேனும் காக்காதுவிடுவோமாயின், நமது மதம் சிறிதுகாலத்திற்குள்ளே ஒழிந்துபோய்விடுமென்று சில அபிமானிகள் சொல்வது உண்மையே. இப்படிப்பட்ட எண்ணங்கொண்டே அதற்காக நமது முன்னோர்கள் பல மடங்களை ஸ்தாபித்தார்கள். அதிலும் சந்நியாசிகளையே அதற்கு அதிபதிகளாக்கினுர்கள். அற்றுயின், மடாதிபதிகளுக்கு வேறு தொழில்தானென்னை? நம்மவர் அளவிறந்த இப் பொருள்களையெல்லாம் அவர்க்கு எதன்பொருட்டுக் கொடுத்தார்கள்? இப்பொழுதும் அவர்கள் நம்மிடத்தே எந்த உரிமையினுற்பெற்றுவருகிருர்கள்? எதனுல் நாம் அவர்களைக் குருவென்று வழங்குகின்றோம்? குருவென்னும் பெயர் அவர்களைப் பெற்றுரிட்ட பெயரல்லவே! தொழிலா லடைந்ததன்றோ? நண்டர்களே! பாருங்கள்! இத்தேசத்திலே எத்தனை மடங்களிருக்கின்றன! ஒவ்வோர் மட

[illegible]

களிலும் எவ்வளவு பொருள்கள் இருக்கின்றன! எம்மடத்தி லாவது மதகாரியம் ஏதேனும் நடக்கின்றதா? ஆராய்வோம்: ஸ்மார்த்தரென வழங்கும் அத்வைதமதஸ்தருக்குள்ள மடங்கள் ஸ்ரீ சிருங்ககிரி, விருபாக்ஷம், புஷ்பகிரி, கூடலீ, ஆமனீ, சிவகங்கை, இராமசந்திரபுரம், கும்பகோணம், துவாரகை, ஜகநாதம் முதலியன. வைணவர் மடங்களோ ஸ்ரீபரகாலசுவாமிமடம், அகோபிலமடம், வானமாமலைமடம், திருமலைமடம் முதலியன. மாத்துவர் மடங்கள் ஸ்ரீவியாஜராயமடம், இராகவேந்திரமடம், உத்தராதிமடம் முதலியன. வல்லபமதஸ்தர்மடங்களோ எண்ணிறந்தன. சைவர் மடங்களில் பிராமணராதீனமாயுள்ளன சில; மற்றவருள ஆதீனப்பட்டன சில. ஆராயுமிடத்து இம்மடங்களுக்கு, பூமியாயும், ஆபரணமாயும், பணமாயும் உள்ள பொருளின் தொகை, சுமார் ௨0. கோடிக்கு குறையாது. இவ்வளவு பொருள்களும் அம்மடங்களிலேயபிஷேகம்பெற்றவர் பாடுபட்டுச் சம்பாதித்ததல்ல. அவையெல்லாம் நம்மவர் மதவிஷயத்திற்கெனச் சேகரித்துவைக்கப்பட்டனவே. பாருங்கள்! அப்பொருள் இப்பொழுது எவ்வித உபயோகமாகின்றது! முற்காலத்தவர் தாமும் தங்குடும்பத்தாரும் செவ்வே உண்ணாதும் உடாதும் தம் செலவைச் சுருக்கி அரும்பாடுபட்டுச் சம்பாதித்த பொருளை மதவிஷயத்திற்கென ஓரிடத்தே வைத்து, அவைகளைக் காக்கச் சந்நியாசிகளே தகுந்தவரென்றும் அவர்களுக்கு மோக்ஷவிருப்பேயன்றி வேறு விருப்பில்லாமையினால் அவர்கள் கிரமமாகப் பொருளைக் காத்து உத்தேசப்படி மதவிஷயத்திலேயே செலவழித்து மதத்தைக் காத்துவருவார்களென்றும் எண்ணியே அவ்வாறு செய்தனர். இக்காலத்திலேஅது முற்றிலும் மாறிற்று. இக்காலத்தவர் துறப்பது ஆசைகளையல்ல; பரம்பொருளினிடத்தே உள்ள அன்புடைமை, லோகோபகாரத்தையுமே. வேறோர் அனர்த்தமும் இங்குண்டு. இக்காலத்துள்ள மடாதிபதிகள் அன்னமளித்தலொன்றே தமக்குரிய தொழிலெனக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் விருதுகூறுங்காலத்து அன்னமளிட்டோனென்னும் விருதுமாத்திரம் எவரும் எங்கும் கூறக் கண்டிலேம். அவ்வவ் மதங்களை நிலைநிறுத்தினவர்கள் என்றே விருதிருக்கின்றது. ருசியுள்ள கோதுமை வாதுமை சேர்ந்த சிற்றுண்டிகளுடன் கூடிய போசனமே மதச்சொற்பொருளாக்கிக்கொண்டார்போலும்! அதையன்றோ இவர் எப்பொழுதும் ஸ்தாபிப்பது! அஃதல்லவோ மடாதிபதிகள் வேலையாய்ச் சாமானிய ஜனங்கள் விவகரிப்பது! இவர் விருதுகளில் எழுதியபடி மதத்தைக் காவாதொழிந்தார். தாம் எழுதிக்கொள்ளாத அன்னமளித்தலை மட்டும் ஒருபான்மை செய்துவருகிறார்கள். [இதனால் நாம் அன்னதானந் தீயதென்று சொல்ல வந்திலேம். அது இவர் வேலையன்றென்பதுமட்டில் எமது கருத்தெனக.] இஃதன்றி, அச்செலவுகள் செய்து எஞ்சிய பொருளால் பொற்பணிப்பிரதிஷ்டை செய்வார்கள். தம்மை யடுத்தவரும் நம்மவருள் மதச்சண்டையில் வல்லவருமான சிலருக்குச் சிறிது கொடுப்பார்கள். இதிலெல்லாம் மிஞ்சினாலும், மிஞ்சாவிடிற் கடன்பட்டாயினும் ஒரு மடத்தாரோடு மற்றொரு மடத்தார் வீண்வழக்காடி வக்கீல்களுக்கும் மற்றும் அநேகருக்கும் வாரிக்கொடுத்து, பணம் வரும் வழியைச் சிறிதும் லக்ஷியஞ்செய்யாது நேர்ந்தவாறு ஒழிக்கின்றார்கள். இப்பொருளை இவர் தாம் பாடுபட்டுச் சம்பாதித்திருந்தால் இவர் ஒருநாளும் இப்படிச் செலவழிக்கத்

[illegible]

துணியமாட்டார். இவர் அப்பொருள்களைத் தமதென்றெண்ணிக் காப்பதுமில்லை; வேறொன்றறகாக ஏற்பட்டதென்றெண்ணி உத்தேசப்பிரகாரம் கிரமத்தில் உபயோகிப்பதுமில்லை. இங்ஙனமிருக்க; நம்மவரோ பொருள்வரவு குன்றி அரசினரால் விதிக்கப்பட்ட பலவித வரிகளால் நொந்து தளர்ந்திருக்க, மதத்திற்காக அபரிமிதமாய்ப் பணங்கொடுக்கும்படி கேட்டால் அவர்கள் என்செய்வார்கள். இப்படிப்பட்ட ஆபத்துக்காலத்திற்குதவுமென்றெண்ணி முன்னோர் கொடுத்த பொருளையும், இப்பொழுதும் நம்மவரிடம் சிறுதுசிறிதாய்ப் பெற்றுவரும் பொருளையும் ஏதேதோ விஷயங்களில் விநியோகித்துவரும் மடாதிபதிகள் தன்மையைப் பார்த்தீர்களா! இப்பொழுது ஒரு மடாதிபதியாவது, இத்தேசத்திலே தோன்றிவரும் கெடுதியை உணர்ந்து மதங்களைக் காக்க முயன்று பலவிடங்களில் தமது சீஷரைக் கூட்டமாகச் சேர்த்துப் பண்டிதர்களைக்கொண்டு ஆங்காங்கு பிரசங்கங்களைச் செய்வித்துப் புறமத ஆபாசங்களை வெளியிடச்செய்து இவைகட்கு இன்றியமையாச் சாதகமாகிய அச்சியந்திரசாலைகளைக் கருவிகளாய்க்கொண்டு சிறு துண்டுப்பத்திரிகைகளால் புறமதத்தைத் தூற்றி பற்பல மதபாடசாலைகளை ஏற்படுத்தி இன்னும் இப்படிப்பட்ட வேலைகளைச் செய்யும் உபகாரிகளுக்குச் சிறிது பொருளுதவியுஞ் செய்து பிரசங்கிகளுக்குச் சம்பளமேற்படுத்திப் பலவிடங்களுக்கனுப்பி அவர்களால் புறமதப் பைசாசங்களையோட்டிப் பலதேச பாஷைகளால் நமது மதவிஷயங்களை எடுத்துரைத்து இந்துமதத்தை நிலைநாட்டக் கருதுவாராயின், நமது மதம் புன்மதப்பெருவெள்ளத்திற் சிக்காது நிலைபெறுமென்பதிற் றடையில்லை. மேற்றிசையார் நம்மவரைத் தம்மதத்திற் சேர்க்க, நம்மவர் உள்ச்சண்டைசெய்து தம்வீட்டு வீரராய் உறங்கி நமது மதத்தைக் காக்கவல்லிமையற்றிருப்பது நம் பண்டிதருக்கும் மடாதிபதிகளுக்கும் ஆண்மையாமா! மதங்களொழிந்தபின் மதாசாரியரென்பவர்கள் எவரிருப்பார்கள்! நம்மவன் ஒருவன் பிறர்மதத்திற் புகுந்தால், அவர்க்கு ஒருவன் லாபம், நம்மவர்க்கு ஒருவன் நஷ்டம். மேற்றிசையார் செய்யவேண்டியது மற்ற மதஸ்தரைத் தம்மதஸ்தவராக்கவேண்டியது; நம்மவரோ நம்மதஸ்தரைப் பிறர்மதத்திற் போகாமல் நிலைநிறுத்தவேண்டியதே. இது செய்யவே இவரால் முடியவில்லையே! இவர் எப்படிப் பிறர்மதத்தை வெல்லுவார்! பரமதகண்டனரென்று விருது சொல்வதில் இவர்க்கு அவமானமில்லையே! ஆதலால், இந்துக்களே! நம் முன்னோர் மதத்திற்காக வைத்த மூலதனம் இருக்கும் இடங்களை அறியுங்கள்! அவர்கள் தம் வேலையைச் செய்யாது ஏதேதோ செய்து பணத்தை வீணாக்கினால் நீங்கள் கூடி அவற்றைத் தடுக்கவேண்டும். அப்பொருள் மதாசாரங்களின் பொருட்டே செலவழிக்கும்படி செய்யவேண்டும். இப்பொழுதோ அனேகமாய் மடங்களில் கடன் மிகுதியாயிற்று! பணம் வழிதப்பிப்போகின்றது! நீங்கள் காலஞ்சென்று முயன்றால் காரியமாவது கடினம்! அனேக மடங்கள் ஒழிந்துபோய்விட்டன! இச்சமயத்தில் சும்மாவிராது ஒன்றுசேருங்கள்! நாம் சொல்வனவற்றில் ஏதேனுங் குற்றமிருந்தால் எடுத்துச்சொல்லுங்கள்! ஓர் திருஷ்டாந்தமாகப் பாருங்கள்:—துவாரகாமடத்தின் நிலை எவ்வாறாயிற்று! சைவர் மடங்களில் திருப்பனந்தாள், தருமபுரம் முதலியவைகள் எவ்விதமிருக்கின்றன! இவ்விருமடங்களின் பணத்தால் எவ்வளவுபேர் தனவந்தரானர்

[illegible]

𑌗𑍀𑌰𑍍𑌵𑌾𑌣𑌭𑌾𑌷𑌾.

𑌇𑌤𑌿𑌹𑌾𑌸𑌃 (𑌕𑍍𑌰𑌮𑌾𑌗𑌤𑌃)

—:(*):—

𑌆𑌰𑍍𑌯𑌾𑌃!

[illegible]

கள்! எத்தனை வக்கீல்கள் அரசனையொத்தார்கள்! சூரனூர் கோவிலாதீன நிமித்தம் திருவாவடுதுறையாதீனத்தில் எவ்வளவு பொருள் செலவழிந்தது! அகோபில மடத்தில சடகோபசுவாமிகள்காலத்தின் கோலத்தை யறியாதவர் யாவர்! வானமாமலைமடத்தில் சென்ற மூன்றுவருஷங்களுக்குமுன் நடந்த சங்கதியும் அறிந்திருப்பீர்களே! ஆதலால், எம் சகோதரர்களே! வீண் முயற்சியை விடுங்கள்! ஆங்காங்கு கூடுங்கள்! மடாதிபதிகளின் சீர்திருத்தத்தைப்பற்றி முயலுங்கள்! நமது மதத்தை விருத்திசெய்யும் வழிகளைத் தேடுங்கள்! அவர் தொழில் இன்னதென்பதை அவர்க்கு உணர்த்துங்கள்! புறமததைதைக் கண்டிக்க வித்துவான்களை ஆங்காங்கு அனுப்புங்கள்! பெரியோர் அருளிச்செய்த அரிய நூல்களை வெளியிடுங்கள்! சிறுதுண்டுப்பத்திரிகைகளால் பரமத ஆபாசங்களையெடுத்துக் கூறுங்கள்! நம்மதத்தைக் காருங்கள்! வீண்செலவு செய்யாதீர்கள்! உண்மதச்சண்டைகளை விட்டுவிடுங்கள்! இவைகட்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள்! ஆபாசமே மலிந்த புறமதப் பைசாசங்களை ஓட்டுங்கள்! எமது வார்த்தையை உள்ளத்திலிருத்துங்கள்! எப்போலிகளையும் உண்மையனுஷ்டானத்தால் அனுக்கிரகியுங்கள்! பெரியோர் விதித்த நல்லொழுக்கங்களை இயன்றமட்டில் கைவிடாதீர்கள்! பண்டிதர்களை ஆதரியுங்கள்! ஒற்றுமையடையுங்கள்! நமது தேசத்தில் பெருமையையும், கல்வியையும், செல்வத்தையும், பற்பல நன்முயற்சிகளையும் நிலைநாட்டுங்கள்! உங்கள் முயற்சிகைகூடுவதாக! உங்கட்குப் புத்திபலம் மென்மேலும் உண்டாவதாக! உங்கட்கு நல்லிருப்புண்டாவதாக! கிருபாசமுத்திரமாகிய கடவுளின் திருவருள் பெருகுவதாக! நம்மவர் மதம் ஓங்குக! நமது மடாதிபதிகள் சீர்திருந்துவாராக! நமது கோரிக்கை முற்றுக! கடவுள் துணை.

—:O:—

சம்ஸ்கிருதபாஷை.

இதிகாசம். [முன்தொடர்பு.]

நாம் முற்பத்திரிகையில் மாபாரதத்திலே அறியவேண்டிய அரும்பொருட்டொகுதியை எடுத்துக்காட்டுவதாய் உரைத்தாமன்றோ? அதுவிஷயத்தைப்பற்றி மாபாரதத்தில் முதலிற்றானே தாம் எழுதிய மாபாரதத்தின் விஷயங்களைப் பிரமதேவனுக்கறிவிக்க ஸ்ரீவாதராயணமுனிவர் "ஓ பிரமதேவனே! இப்பாரதத்தில் வேதரகசியமும், உபநிடதங்களின் உண்மையும், இதிகாசபுராணங்களின் தாற்பரியங்களும், இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்னும் முக்காலநிலைமைகளும்" என்று தொடங்கி "நான்கு வருணங்களும், எல்லாப் புராணங்களின் உண்மைகளும், தவத்தின் நிலைமை, பிரமசரியத்தின் பெருமை, பூமி, சூரியன், சந்திரன் இவைகளின் உண்மை, கிரகங்கள், நக்ஷத்திரங்கள், தாரைகள், இவைகளின் பிரமாணம், யுகப்பிரமாணம், இருக்கு, யஜுர், சாமம் என்பவற்றின் உண்மை, நியாயம், சிக்ஷை, சிகிச்சை, பாசுபதஞானம்" என்றும், "ஏதுக்களுடன் தேவ மனித ஜன்மங்களும், சர்வபரிபூரண வஸ்துவின் நிலைமையும் வெளியிட்டேன்" என்றும் தாம்நேரே சில வசனங்களை எழுதியிருக்கின்றார். இவ்விடம் ஆசிரியர் நேரே எடுத்துரைத்தபடி வேதரகசியம் முதலிய விஷயங்கள்

[illegible]

[illegible]

[illegible]

இம்மாபாரதத்தில் நேரே எடுத்துக்காட்டப்பட்டதாய் ஒரு பாகமேனும் காணப்படவில்லை. ஆசிரியர் வார்த்தையும் அருத்தமற்றதாகாது. இவ்விடத்தில் சொல்லப்படாத கதை முதலியவைகள் இவ்விடமுள்ள விஷயங்களாய்த் தெரியவருகின்றது. சிலவிடங்களில்மாத்திரம் சில தருமங்களும், ஞானம், யோகம், பக்தி முதலியனவும் வெளியிடப்படுகின்றன. சற்சில சித்தாந்தங்களும் ஆங்காங்கு விரிக்கப்படுகின்றன. இங்கு எடுக்கப்பட்ட விஷயங்கள் முக்கியவிஷயங்களானால், இவைகளைப்பற்றியே நெடுக எடுத்துரைத்திருப்பார். அங்ஙனமில்லாமையால், அவை முக்கியமானவிஷயங்களென்றென்றே நாம் சொல்லவேண்டியதென்று கூறும் சிலரை நோக்கி நாம் அறிந்தபட்டில் சில கூறுவாம்:—வேதவியாசர், பிரமதேவனிடம் சொல்லும்பொழுது இப்பாரதத்தின் உண்மைவிஷயங்களை ஒளித்து, முக்கியமற்ற விஷயங்களை எடுத்துக்காட்டி ஏதோவழியாய் எழுதினரென்பது அவ்வளவு உசிதமன்றல்லவா? ஆராயுங்கால், அங்கெடுத்துரைக்கப்பட்டவைகளே முக்கிய விஷயங்களாம். ஆயின் அவை முறையே எடுத்துக்காட்டப்படாத தென்னையெனின், முதலிற்றானே "பகவானே யாவரும் பூஜிக்கத்தக்க இக்காவியத்தை யான் இயற்றினேன்" என்று வேதவியாசாசாரியார் தாமே பாரதத்தைக் காவியமென்னும் பெயரால் அழைத்தார். அங்ஙனமே பிரமதேவனும் "நீரும் காவியமென்றழைத்தீர். அதனால் அது காவியமாகக்கடவது." என்றனுக்கிரகித்தாராதலாலும், "கவிகளுக்கு இது வெகு ஆதாரமாகும்" என்று எழுதப்பட்டிருத்தலாலும் இது காவியமாதல்பற்றி, காவியங்களுள் உபர்ந்ததென்க. தமது குறிப்புப்பொருளை மேன்மையுள்ளதாய்க் கொள்வ தியற்கையென்று எல்லோரு மறிந்த விஷயமாதலால், தாம் "எல்லோரும் பூஜிக்கத்தக்க காவியமொன்றியற்றினேன்" என்றுரைத்தபடி தமது வார்த்தைக்கேற்பச் செம்பொருளென்பதும், சொற்பொருளாய் நின்ற மற்றவைகளினும் மேன்மையை யடையத்தக்க குறிப்புப்பொருளாய் இவைகளை யழைத்தாரென்பதுமே உண்மையாம். ஆதல்பற்றியே ஆராயுமிடத்து இங்கெடுத்த விஷயங்கள் இப்பாரதத்தில் எங்கும் சொற்பொருளாய் எடுத்துரைக்கப்படவில்லை. எல்லாம் குறிக்கப்பட்டமையினாற்றான், இவை முக்கிய விஷயங்களாம். அதுபற்றியே ஆன்றோர் பலரும் இதனைக் காவியமென வழங்குகின்றார்கள். தத்தம் மதங்களுக்கு வேண்டியபடி தாற்பரியப்படுத்துகிறார்கள்.

இன்னும் வரும்.

கடிதங்கள்.

கடிதர்கள் அபிப்பிராயத்திற்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

[☞ கடிதம் எழுதுவோர் சங்கதியை வீணாக வளர்த்தாமல் சுருக்கமாகச் செவ்விய நடையில் நல்ல மை கொண்டு காகிதத்தின் ஓரேபக்கத்தில் எழுத்துக்களை ஒன்றோடொன்று பிணைக்காமல் தெளிவாக எழுதல்வேண்டும். பொதுநன்மையை நாடாத கடிதங்களும், வீண் தூஷணை மலியப்பெற்ற கடிதங்களும், மேற்கண்டபடி செவ்வையாக எழுதப்படாத கடிதங்களும் இடம்பெறா. கடிதத்தில் தாம் எப்பெயரையிடினும் பத்திராதிபர்க்குமட்டில் தம் சொந்தப் பெயர் ஊர் விலாசம் முதலியவற்றைத் தெரிவித்தல்வேண்டும்]

[illegible]

[illegible]

[illegible]

ஓர் விண்ணப்பம்.

—:0:—

ஸ்ரீ ப்ரம்மவித்தியாபத்திராதிபரவர்காள்! அநேக வந்தனம்!

ஒருவர் திருமண்காப்புத் தரித்தலைக்குறித்து ஏதேதோ எழுதினர். தாங்களும் அதனை அங்ஙனமே வெளியிட்டீர்கள். அவர் எழுதிய அத் தமிழ்வசனத்தைப் பார்த்து நானும் அதற்கு மறுப்பாய்ச் சம்ஸ்கிருதத்தில் ஒன்று எழுதினேன். ௫-ம் பத்திரிகையில் வெளியிட்டிருந்ததுங் கண்டேன். ஆயினும், அத் தமிழ் நிரூபநேசர் எவ்விதம் திருமண் முதலியவற்றை எடுக்கும் வழிகளை எழுதினரோ அவ்விதமே யானும் கோமயமுதலியவற்றைக் கொண்டுவரும் வழிகளை எழுதினேன். தாங்கள் அவர் கடிதத்தை முழுதும் வெளியிட்டதுபோல என் கடிதத்தையும் வெளியிடாது, அதிற் சிலபாகத்தை விட்டுவிட்டீர்கள். அது எனக்கு விசனமே! இதுநிற்க; தங்கள் பத்திரிகையில் ஓர் தமிழறிஞரான வித்துவான் எழுதிய விஷயத்தைப் பார்த்தேன். அவர், வைதிகசித்தாந்தரத்தினவளி எழுதினவரை "தாம் பண்டிதரெனத் தாமே நிச்சயித்து" என்று தொடங்கியவசனத்தால் ஒருவாறு மறுத்ததாக எண்ணியது அறிஞருள்ளத்தில் படுமா. அவர் திருநீறுதரித்தல் பாசுபதத்திற்கே யுரியதென்று கூறினர். ஆகையால், அவரை இவர் அப்பண்டிதராக எண்ணினர்போலும். இதுவும் நிற்க; "வேதங்களில் வெண்ணிறத்திருமண்ணைத் தரிக்கவேண்டிய பிரமாணமுண்டா" என்று தொடங்கி "இதனால் யாதும் சமாதானம் செய்யப்படவில்லை" என்ப திறுதியாய்க் கூறியுள்ள வாக்கியங்கள் உற்றுநோக்கில் நியாயவிரோதமே. வைகாநசமணியாய நமது ஸ்ரீமான் சுந்தரராஜசாஸ்திரிகள், வைகாநசம் வேதமூலமென்று அறிந்தல்லவோ வெண்ணிறத்திருமண்ணைத் தரித்தல் வைதிகமென்பதற்கு மூலவேதவசனத்திற்கு அந்த வைகாநசவசனங்களை எடுத்துதாரித்தார். அவ்வைகாநசம் வைதிகமென்று தாபிக்கப்போவதாயும் கூறினர். உடனே அது வைதிகம் என்பதற்கு வேண்டியவைகளை எழுதினர். அக்கடிதத்தைத் தாங்கள் யாது காரணத்தாலோ நெடுநாள் உள்ளழுத்திப் பின் சென்றபத்திரிகையில் வெளியிட்டீர்கள். நூற்றெட்டுபநிடதங்களில் ஒன்றாகிய சீதோபநிஷத்தில் வைகாநசமதத்தின் பரத்தன்மை வெளியாகின்றதே. "ஸ்ரீஹரிமுகத்தில் நாதம் பிறந்தது. நாதத்தில் விந்து பிறந்தது. விந்துவில் பிரணவம் உண்டாயிற்று. பிரணவத்தில் வைகாநஸமலை தோன்றிற்று. அம்மலையில் சர்மம், ஞானம் முதலிய பல கிளைகள் உண்டு. அது வேதமயம். எல்லாப் பொருள்களையுங் காட்டுங் கருவி." என்றும், "ஆதியில் வைகாநஸமதம் பிரத்தியக்ஷதரிசனமாயிற்று. முனிவர்கள் அதைச் சிறந்ததாகச் சொல்வார்கள்.,, என்றும் தொடங்கிய வசனங்களால் என்றறிக. இதுவிஷயத்தில் அவ்வைகாநஸமணியே உதகரித்த பல வசனங்களையும் இவர் கண்டுணர்வாராக. மேலும், "அதற்கு இவர் காட்டியது,, என்று தொடங்கி "அதை எவ்விதம் தள்ளலாம்,, என்பது வரையில் அவர் எடுத்துக் காட்டிய விஷயம் மட்டில் விசாரிக்கவேண்டியதே. உபநிடதங்கள் ஆயிரமா? நூறு? அன்றிப் பத்தா? பத்தெனில், எல்லாப் புண்டரங்களும் ஒன்றுபோலவேயிருக்கும். நூறெனில், ஆயிரம் என்று ஏன் சொல்லக்கூடாது? முத்திகோபநிடதம் நூறு உபநிடதங்களைப் பிரமாணமெனச் சொல்லுகின்றதேயென்னில், ஆயிர உபநிடதங்களையும் பிரமாணமென்றே சொல்கி

[illegible]

ன்றது. ஆதலாற்றான் அங்குள்ள நூறு உபநிடதங்களிலும் அகப்படாத ஆதர்வணம் முதலிய உபநிடதங்களை வைத்திநாத தீக்ஷிதர்முதலாயினோர் எடுத்து உதகரித்திருக்கின்றார்கள். ஆதலால், ஆயிர உபநிடதங்களிலுள்ள லகுவராகோபநிடதமும் பிரமாணமேயாம். ஆனால், தென்கலையாரென வழக்கும் தென்னாசாரியசம்பிரதாயஸ்தர் அதைக் கற்பிதமெனச் சொன்னாரேயென்னில், அதனால் இவருக்கென்ன சாதகம்? வெகுகாலமாய் நம்மவருட் சிலருக்கு இத்துரப்பியாசம் ஒன்றுண்டு. அதாவது தமது கொள்கைக்கு மாறான வசனங்களைக் கற்பிதமென்று கூறுதல். கிறிஸ்தவரும் நான்குவருணங்களையெடுத்துரைக்கும் வேதங்களைக் கற்பிதமென்றல்லவா சொல்லுகின்றனர். சத்திமதஸ்தர் ஸ்ரீபாகவதம் கற்பிதமென்கின்றார்கள். மதவாதிகள்மாத்திரமல்ல; மற்ற லௌகிகரும் நியாயமறிந்த நியாயவாதிகளும் தமக்கு விரோதமானவை கற்பிதமென்றே வாதிககிறார்கள். ஆதலால், நாம் வேதங்களைப்பற்றிச் சத்தியமா கற்பிதமாவென்று விசாரிக்கவேண்டுமா? வராகோபநிடதமாவது கபிலோபநிடதமாவது கற்பிதமாயின், நம்மிலும் ஞானிகளான பெரியோர்கள் எப்படி அதை அங்கீகரித்தார்கள்? அவர்களுக்குள்ள வேதவாக்கியங்களை விட்டுக் கற்பிதவாக்கியங்களை அனுசரித்த காரணமென்னை? சிலவிஷயங்களில் வேதம் நேரே ஓதப்படும். வேதம் மூலமாய் அகப்பாவிடினும் சிஷ்டர்கள் ஆசாரத்தைக்கொண்டு பிரமாண வேதத்தை அநுமித்தலுங்கூட நம்மவர் வழக்கமாயிற்றே. “தென்னாசாரியபிரபாவகண்டனமென்னும் புஸ்தகத்தில் “அவன் பிரமஹத்திசெய்தவன்,, என்று ஒருவர் தூஷித்திருக்கின்றார்,, என்று அவர் எழுதியதும் சாதனமாகாது. உட்சண்டைகளில் ஒருவனையொருவர் நிந்திப்பது வழக்கமேயாம். இதனால் அவருக்கு லாபமென்னை? வராகோபநிடதமும் கபிலோபநிடதமும் ஒன்றற்கொன்று மாறுபட்டால், அவ்விரண்டும் அப்பிரமாணமாமா? உதித்தபின் ஹோமஞ்செய்தலையும் உதிக்குமுன் ஹோமஞ்செய்தலையும் விதிக்கும் இரண்டு வேதங்களும் ஒன்றற்கொன்று மாறுபடுதலால், அவை கற்பிதமேனும் அப்பிரமாணமேனும் ஆகுமா? அனேக ஸ்மிருதி புராண இதிகாச வசனங்கள் ஒன்றைச் சொல்லி மற்றொன்றை நிந்திப்பது வழக்கந்தானே. இதற்கல்லவோ நம்முன்னோர்கள் “நிந்தையென்பது ஒன்றை நிந்திக்க வந்ததல்ல; மற்றொன்றைத் துதிக்கவே,, என்று ஒரு நியாயத்தை ஒத்துக்கொண்டார்கள். இனி, அவர் ஸ்ரீசூரணத்தைப் பற்றிச் செய்த ஆக்ஷேபத்தையும் கவனிப்பாம்: அவர், ஆசௌசாதிகளில் திருநீறிடுதலில்லாமையால் அதை அவைதிகமென்றும், திருமண்மாத்திரம் தரிக்கப்படுவதால் அது வைதிகமென்றும் ஓதபவேண்டுமே. திருச்சூரணத்தில் மட்டில் அவர் ஆசங்கித்தாரெனின், அது எமக்கு மிகச் சந்தோஷமே. ஸ்ரீசூர்ணம் உபநிடதங்களில் உளதாயினும் ஆசௌசகாலத்தில் மங்களகரமான செய்கை ஒன்றும் செய்யக்கூடாதென்று சாமானியமாய் விலக்கியபடியால் அவைகள் அக்காலத்திற் கூடாதென ஏற்பட்டது. அங்ஙனமே தேவதைகளைப் பூசித்தலும் அக்காலத்திற் கூடாதென்றிருப்பதால்தான் அநேக் வேதங்களில் சொல்லியதாயினும் ஈசுராராதனம் அக்காலத்தில் அநுஷ்டிக்கப்படவில்லை. இதுநிற்க; இனி, அவர் திருநீறுதரித்தல் அவைதிகமாவதெங்ஙனமென்று வினவியதற்குச் சமாதானங் கூறுவாம்; திருமண் வைதிகமென்பதில் “சூடிசகன் வெண்

[illegible]

ணிறமண்ணை ஊர்த்துவபுண்டரமாய்த் தரிப்பன்,, என்பது ஒரு பிரமாணம் போதாதா? இவருக்குப் பிரமாணமென்றால் எவ்வளவு? பத்தா? நூறு? ஆயிரமா? பாசுபதமென்னும் ஓர் பதம் திருநீறு தாந்திரிகமென்று காட்டக் கருவியாகாதோ? திருநீறுதரித்தற்குப் பாசுபதரேயதிகாரிகளென்று சொல்லவேண்டியன்றோ வேதம் "இஃது பாசுபதவிரதம்,, என்று கூறுகின்றது. இனி இவ்விஷயத்தில் விளக்கவேண்டியதென்னவிருக்கின்றது. வேதத்திற் சொன்னதே தந்திரத்திலுமிருந்தால, அது வைதிகமாகாது. ஓர் தேவதையின் பிரீதியை நோக்கி ஒரு கருமஞ்சொல்லப்படினும் அது அவைதிகமன்று. வேதத்தில் இது வைதிகருக்கென்று சொல்லப்பட்டதும் அவைதிகமன்று. பின்னர் எவரெவருக்கு எந்தெந்தக் கருமம் சொல்லப்படுமோ அவரவருக்கு அதது வைதிகமாகவே கொள்ளற்பாலதாம். நமது நண்பர் மனதில் வெகுகாலமாய் இருந்த சமுசயம் இங்கு நாம் எடுத்துக்காட்டிய வழியால் ஒழிந்திருப்பினும் நன்றாய் மறுபடியும் விளக்கிக்காட்டுவாம்: ஸ்ரீஹரியினுடைய திருவடித்தாமரைகளைப்பூஜிக்கும் ஒவ்வொருவரும் "ஊர்த்துவபுண்டரந் தரித்து,, என்று தொடங்கிய வேதவாக்கியத்தை நம்பி ஊர்த்துவபுண்டரமாகவே தரிப்பதில் வர்ணபேதமும், ஆசாரபேதமும் உண்டாவதற்குக் காரணம் யாதெனில், சிலர் வாசுதேவோபநிஷத்திற் சொல்லியபடி கோபீசந்தனத்தைத் தரிக்கின்றார்கள். சிலர் சந்நியாசோபநிஷத்து, வராகோபநிஷத்து முதலிய உபநிடதங்களிற் சொல்லியிருக்கிறபடி வெண்ணிறத்திருமண்ணைத் தரிக்கின்றார்கள். மற்றவர் வேறுபிரமாணங்களைக்கொண்டு வேறுவிதம் தரிக்கிறார்கள். இவ்விதம் ஸ்ரீஹரிபக்தர் ஓரேயடையாளத்தை மாற்றித் தரித்ததனால் அவர் அவைணவராவதெங்ஙனம்? உலகத்திலே வேதங்கள் சூத்திரங்கள் ஒன்றாயிருந்தும், வழிபடுங் கடவுளும் ஸ்ரீமந் நாராயணன் அல்லது ஸ்ரீபரமசிவனாயிருந்தும் சிலர் சிகையைப் பின்தலையிலும், சிலர் முன்பக்கத்திலும், சிலர் உச்சியிலும் வைப்பதனால், அவர்களில் எந்தப் பிராமணனாவது சிகையற்றவனாவனோ என்பதை நமது நண்பர் சிறிது கவனிக்கக்கடவர்.

பத்தமடை, S. இராமசேஷய்யர்.
ஹிந்துகாலேஜ் உபாத்தியாயர்.
திருநெல்வேலி.

[மொழிபெயர்ப்பு]

—:0:—

சிவன் துரியரென்பது.

கனம்பொருந்திய ப்ரம்மவித்தியாபத்திராதிபரவர்கட்கு வந்தனம்.

ஐய!

தங்களுடைய பத்திரிகையில் ஏப்ரல்மீ 30-உயில் ஒருவரும், மேமீ 30-உயில் ஒருவரும், ஜூலைமீ 31-யில் ஒருவருமாகத் தனித்தனி மூன்று பண்டிதர்கள் சில விஷயங்களை யெழுதியிருக்கின்றார்கள். அவை முழுதும் சிவோத்கர்ஷபக்ஷத்தையே தேடித் தியங்குகின்றன. அவைகளைக் கண்ணுற்றயாம் அவைகளைப் பரிகரித்து மகிழ்வது சிவபுண்ணியமெனக் கொண்டு ஈண்டு சில வரைகின்றாம்.

[illegible]

ஏப்ரல்மாசத்தில் வெளிப்பட்ட வஞ்சிநாட்டார் சித்ரூர்த்வபுண்டரம் வேதத்திலுள்ளதெனவும், அதுவே விஷ்ணுவுககுத் தாரியமெனவும், அவருக்கு விபூதிதாரணங் கூடாதென்வும் சில பிரமாணங்களையும் நியாயங்களையுங் காட்டித் தமது கக்ஷியைத் தாபித்துவிட்டதாகச் சந்தோஷித்தார். அவர் காட்டிய வுபநிஷத்துக்களும, அவரது நியாயங்களும் எத்தகையினவென்பதைப் பின்னர்ச் சாவதானமாக வெளிப்படுத்துவாம். அதுநிறக.

மேமாசத்தில் வெளிப்பட்ட வேப்பத்தூராரையும், ஜூலை மாசத்தில் வெளிப்பட்ட எலத்தூர்ப்பண்டிதரையும் கொஞ்சம் ஏறெடுத்துப் பார்க்கத் துணிந்தாம். இவருள் நமது வேப்பத்தூர்ப் பண்டிதர் இராமதாபனியென்னும் உபநிஷத்தில் "சிவமத்வைதம்,, என்னும் வசனமானது [அத்துவிதனான சிவனை நான்காவது பொருளாக எண்ணுகிறார்கள்] என்று தெரிவிக்கிறதெனவும், மாண்டூக்கியத்தில் "சாந்தம் சிவ மத்வைதம்,, என்னும் வசனமானது [சாந்தியினிடமாயும், அத்துவிதனுயுமுள்ள சிவனை நான்காம்பொருளா யெண்ணுகின்றனர்] என்று தெரிவிக்கிறதெனவும், பிரஹ்மோபநிஷத்தில் "துரீயமக்ஷரமாதித்யோ விஷ்ணுஶ்சேஶ்வரஶ்ச,, என்னும் வசனமானது [துரியம் அழிவற்றது, ஆதித்தியனும், விஷ்ணுவும், ஈசுரனுமாயுள்ளது] என்று தெரிவிக்கிறதெனவும் பொருளுரைத்து இராமனைப் பிரதிபாதிக்கு முபநிஷத்திற் பெறப்பட்ட சிவசப்தம் அவ்விராமனது பரமாகவே ஸமர்த்திக்கத்தக்கதெனவும், அதனாலவ்வுபநிஷத்திற்போந்த துரியப்பொருள் இராமனேயாமெனவும், அப்படியே யேனை யுபநிஷத்துக்களிற்போந்த சிவசப்தங்களையும் அவற்றாற் பிரதிபாதிக்கப்படும் துரியநிலையையும் ஸமர்த்திக்கவேண்டியதெனவும், இந்த நியாயத்தால் மாண்டூக்கியத்திற் போந்த சிவசப்தமும் துரியநிலையும் இராமனையே பற்றுமெனவும், பின்னர்க்காட்டிய பிரமோபநிஷத்தில் சிவனைக்குறிக்குஞ் சொல்லே யில்லாமையாலும், விஷ்ணுவென்னுஞ் சொன்மாத்திர மிருக்கின்றமையாலும் இந்த மூன்றுபநிஷத்துக்களாலும் விஷ்ணுவுக்கேயன்றிச் சிவனுக்குத் துரியநிலை கூறுவது கூடாதெனவுஞ் சாதித்தார். அன்றியும், அதர்வசிகையில் "த்யாயீதேசாநம்,, என்னும் வசனத்தில் சிவன் துரியன் என்கிற சொல் லில்லாமையால், அது சிவனையே துரியப்பொருளென்று விளக்க வலியற்றதெனவும் ஓர் நியாயங்கூறித் தமது பக்ஷத்தைச் சமர்த்தித்தார். இன்னும் இதனை வலியுறுத்தற்குச் சுபாலோபநிஷத்தில் "யோப்ரஹ்மாணி,, என்னும் வசனமானது [எவன் பிரமனிடமுள்ளான், எவன் விஷ்ணுவினிடமுள்ளான், எவன் உருத்திரனிடமுள்ளான்] என்று தெரிவிக்கிறதெனவும், திரிபாத்நாராயணோபநிஷத்தில் "நாராயணாம்சைரஜோகுணப்ரதானை ,, என்னும் வசனமானது [நாராயணாம்சமாயுள்ளவரும், ரஜோகுணப்பிரதானரும்] என்று தெரிவிக்கிறதெனவும் பொருளை விளக்கித் தாமெடுத்துக்கொண்ட சுபாலோபநிஷத்தானது ஸ்ரீலட்சுமீபதியே பரதத்துவமென்றும், ஏனைக் கடவுளர் அவர்க்கிணையாகார், அவரினுந் தாழ்ந்தவரேயென்று கூறுகின்றதெனவும், இவற்றால் நாராயணனே பரதத்துவப்பொருளாயினனெனவுந் தாபித்துச் சந்தோஷித்தார். அன்றியும், சாந்தோக்கியத்தில் "ஏகமேவாத்விதியம்,, என்றதேயன்றி "ஏகமேவாத்விதீயம்ப்ரஹ்ம,, என்று கூறப்

[illegible]

படவில்லையெனவும், அதனால், "ஏக ஏவருத்ரோநத்விதீயாய தஸ்தே" என்னுஞ் சுருதியிற் போந்த ருத்ரன் பிரஹ்மமாகமாட்டானெனவும் ஓரரிய நியாயங் கண்டுபிடித்துக் கூறினர். இதற்குமேல் ஊர்த்வபுண்டரதாரணம், துளசீகாஷ்டதாரணம, பஸ்மருத்ராக்ஷநிந்தை, இத்தியாதிகளைக் கூறி யுபசாந்தியடைந்தார். இவற்றுள் ஊர்த்வபுண்டரதாரணாதிகளையும், பஸ்மநிந்தாதிகளையும வஞ்சிநாட்டாருக்கு யாம் பின்னர்க் கூறும் பகுதியிற் சேர்த்துச் சமாதானங் கூறுவோம். இவைநிற்க, ஏனைப் பகுதிகளை முறையே யெடுத்து விவகரித்து எமது பக்ஷத்தை நிறுத்துவாம்.

நமது வேப்பத்தூரார் இராமதாபனியில் தமது இராமமூர்த்திக்குத் துரியத்துவத்தை இராமசப்தத்தாற் சமர்த்திக்காமல் சிவசப்தத்தாற்சமர்த்தித்தது பரிதாபமாயிருக்கின்றது. அந்த இராமதாபனீயமேயன்றி, மாண்டூக்கியத்தாலும் சிவசப்தத்தையே துரியபதத்துக்கு ஆதரவாகத் தேடியிருப்பதை நம்பவர் கவனிக்கவில்லை. துரியத்வ ஸமர்த்தனைக்குச் சிவ சப்தமேயன்றி விஷ்ணு நாராயணாதி சப்தங்கள் யோக்கியமாகாவென்று பூர்வபக்ஷிபாரது பிரசங்கமே யிடந்தந்தமையால், எமக்கு இவ்விஷயத்தில் அதிக பிரயாசமில்லாமற்போச்சுது. பஞ்சருதரங்களிலொன்றாகிய சுவேதாசுவதரத்தில் "வேதஸ்ச ஸர்வைரஹமேவவேத்யோ, வேதாந்தக்ருத்வேதவிதேவசாஹம்" என்று பெறப்பட்ட சிவவசனத்தால் சர்வ வேதவேதாந்தங்களாலும் வேத்யராயுள்ளவர் சிவபெருமானேயென்று வெளிப்படுகின்றது. எல்லா வேத வேதாந்தங்களாலும் சிவனே பரம்பொருளெனத் துணியப்பட்டபின்னர், இராமதாபனிமாத்திரம் சிவைகநிஷ்டமாசாதென்பது யாங்ஙனம்? இராமதாபனி ஸ்தூலப்பார்வையில் இராமமூர்த்தியான விஷ்ணு பரமாகத் தோன்றுமே தவிர, ஸூக்ஷ்மப்பார்வையில் பரசிவ பரமாகவே வெளியாகாநிற்கும். இப்படியே ந்ருசிம்ஹமூர்த்திபரமான ந்ருஸிம்ஹதாபநீயத்திலுங் காண்க. இந்த வுபநிஷத்தில் "ஸகோவாசப்ரஜாபதி" என்று ஆரம்பித்து "ப்ரதமம் பாதம் ஜாநீயாத்" என்று முடித்து, அநந்தரம், சூரியனை இரண்டாவது பாதமும், சந்திரனை மூன்றாவது பாதமுமாகச் சொல்லி "ஸப்ரஹ்மாஸ சிவஸ்ஸஹரிஸ் ஸேந்த்ரஸ் ஸோக்ஷர: பரமஸ்வராட்" என்றதற்றொடக்கத்து வசனத்தால் திரிமூர்த்தியத்தீர்ணரான துரியவஸ்துவையே நாலாவது பாதத்தின் அதிஷ்டானமாக நிலைபெறவித்தது. பின்னும் இந்த ஸாமத்தினது நாலு பாதத்தையுஞ் சொன்ன பிரஜாபதியானவர் "ருதகும்ஸத்யம் பரம்ப்ரஹ்ம புருஷம் க்ருஷ்ணபிங்களம், ஊர்த்வரேதம் விரூபாக்ஷம்,ஸங்கரம்நீலலோஹிதம், உமாபதி: பசுபதி: பிநாகீஹ்யமிதத்யுதி: ஈசானஸ்ஸர்வவித்தியானாம்,ஈஸ்வரஸ்ஸர்வபூதானாம்" என்றித்தியாதிமந்திரத்தையுஞ்சொல்லி அந்தப் பிரகரணத்தை யுபஸம்ஹாரஞ் செய்திருக்கின்றனர். இதனால், ந்ருஸிம்மதாபநீயம் சிவபரத்வ போதகமென்பது சொல்லாமே யமையும். இனி இந்த வுபநிஷத்திலுள்ள சிவநாமங்களையெல்லாம் விஷ்ணுபரமாக அர்த்தஞ்செய்து கிலுஷ்டகல்பன வழியில் திருப்பவேண்டியது நமது பூர்வபக்ஷியாருக்குத் தலைச்சுமையாக முடிந்திருப்பது துக்கிக்கத்தக்கதாயிருக்கின்றது. விஷ்ணுபரமான வுபநிஷத்துக்களிலெல்லாம் சிவநாமங்களைப் புகட்டி அச்சிவசப்தங்களினடியாகவே பரத்வத்தைக் காட்டியிருக்கும் ரஹஸ்யம் பூர்வபுண்ணியமுடையார்க்கே வி

[illegible]

ஸூசநம்

[illegible]

50. [illegible]

[illegible]

க்கும். வைஷ்ணவோபநிஷத்துக்களில் சிவசப்தங்களை வருவித்துப் பரதத்வஸ்தாபனஞ் செய்திருப்பதொழிய, சைவோபநிஷத்துக்களில் விஷ்ணுபரமான சப்தங்களை வருவித்துப் பரத்வஸ்தாபனஞ் செய்திருக்கவில்லை. இவ்வுண்மையை நிலைப்பித்தற்குத் தைத்திரியத்தில், நாராயணம் என்னும் ஸமாக்கியையில் "ஸத்யோஜாதம்ப்ரபத்யாமீ" த்யாதி மந்திரங்கள் படிக்கப்பட்டிருக்கின்றமையே சான்ருகும். இந்த ஸத்யோஜாதாதிமந்திரங்களைப் பிரதிபாதிக்கும் பிரதக்குபநிஷத்தொன்று பஞ்சப்ரம்மோபநிஷத்தென்னு நாமத்தால் பிரஸித்தியடைந்திருக்கின்றது. சுருதிஸ்மிருதிகளுக்காவது, சுருதீதிஹாசங்களுக்காவது ஒன்றுக்கொன்று விரோதமுண்டாகில், சுருதிக்கு அவிரோதமாக ஏனைய நூல்களிற் பொருள்கொள்ளவேண்டும். ஏனைய நூல்களுக் கவிரோதமாகச் சுருதியிற் பொருள்கொள்ளுதல் கூடாது. அதுபோல, சுருதிகளுள் ஒன்றுக் கொன்று விரோதமுண்டாகில், முக்கியசுருதிக் கவிரோதமாகவே கௌணசுருதியில் பொருள்கொள்ளவேண்டும். கௌணசுருதிக்கு அவிரோதமாக முக்கியசுருதியிற் பொருள்கொள்ளுதல் கூடாது. இதனுல், பஞ்சப்ரம்மோபநிஷத்தென்னும் விசேஷத்தால் முக்கியமான இந்தப் பிரகாணம் பிரபலமும், தைத்திரியோபநிஷத்தென்னும் ஸாமானியத்தால் கௌணமான அந்தப் பிரகரணம் துர்ப்பலமுமாகி, ஸத்யோஜாதாதி மந்திரங்கள் சிவைகநிஷ்டமாகவே காட்டப்பட்டது. இப்படி யோசிக்கிறபோது, இராமதாபனியில்வந்த சிவதுரியத்வம் இராமனுக்குப் பரத்வாரோபணஞ் செய்வதற்கான கௌணமாயிற்றேயன்றி, முக்கியமாகாதொழிந்தது. இராமனுக்கு அமுக்கியமாகவே, சிவனுக்கே முக்கியமாகி அவரது துரியத்துவத்தையே நிலைபெறச்செய்ததாயிற்று. இந்த விசாரத்தால், சைவோபநிஷத்துக்களில் சிவன் துரியப்பொருளாயிருப்பதோடு, இதரதேவதாபரமான வுபநிஷத்துக்களிலும் அச்சிவனே துரியப்பொருளாகுதலன்ரே அமைவுபெற்றது? அநேகவுபநிஷத்துக்களால் துரியப்பொருளாகச் சாதிக்கப்படுஞ் சிவபாஞ்சுடரை, இராமதாபநியில் பரத்வமில்லாததாக ஸமர்த்திக்கவந்தது நிஷ்பலமாயிற்று.

இன்னும்வரும்.

கடிதக்காரரிடமிருந்து முழுமையும் வரப்பெற்றும் இடமில்லாமையால் சிறிது வெளியாக்கப்பட்டது. மற்றது பின்வரும். பத்திராதிபர்.

விஜ்ஞாபநம்.

[illegible]

PRINTED AND PUBLISHED FOR THE PROPRIETOR AT THE BRAHMAVIDYA PRESS CHIDAMBARAM.

ப்ரம்மவித்தியா

அனுபந்தம்.

[illegible]

[illegible]

[illegible]

மதாபிமானசபை.

புறமதத்தை நீருக்கப் பூர்வாசாரியர்கள் தோன்றினார்களென்பதைச் சரித்திரவாயிலாக அறிகின்றோம். கிறிஸ்துமதத்தைநாசஞ்செய்ய அப்படிப்பட்டவர்களிப்போது யாருந் தோன்றவில்லை. ஆயினும் சிலர் அந்தந்தவிடங்களில் மிலேச்சத்தன்மையுள்ள கிறிஸ்து மதத்தைத் தலைசாய்த்துவருகின்றார்கள். இது சமுத்திரத்தில் பெருங்காயம் கரைத்ததற்கே யொப்பாம். பாதிரிகள் புகைநுழைபான விடங்களிலெல்லாம் புகுந்து கிறிஸ்தவராக்கிவிட்டார்கள். அவர்களை நிர்த்தூளிசெய்யப் பெரிய காரியம் செய்யவேண்டும். இதற்கு எல்லாவூர்களிலும் மதவிஷயமான சபைகள் கூடித் திரவியம் சேகரித்துப் பிரசங்கம், பத்திரிகை, புத்தகம், வாதம் இவற்றால் அதோகதியாக்கவேண்டும். எல்லாவூர்களிலும் இதுவிஷயத்தில் முயற்சியெடுத்துக்கொண்டு ஆரவாரம் செய்யவேண்டும். நம்மவர் யாவர்க்குமே முழு விரோதியான கிறிஸ்துமதத்தைச் சுத்தமாய் ஒழிக்கிறபரியந்தம் நாமுள்மதச்சண்டை போடக்கூடாது. ஒவ்வொரு ஊரிலும் நாலுபேர் சேர்ந்தாவது ஒவ்வொரு சபை ஏற்படுத்துங்கள். இப்படிப்பட்ட முயற்சி செய்யாவிடில் யாருமே கிறிஸ்தவராய்ப்போவோம். சிவாலய விஷ்ணுவாலயங்கள் மாதாகோவில்களாகும். மடத்திலிருக்கும் சைவ வைணவகுருமார், கழுத்தில் சிலுவையைக் கட்டிக்கொண்டு, கற்பிதமனிதனான கிறஸ்துவே தெய்வமென்று யாவர்க்கும் போதிக்கக் கறுப்புப்பாதிரிகளாகவேண்டும். நாமெல்லாம் கிறிஸ்தவராகி அப்பாதிரிகள் போதனைகளைக் கேட்கவேண்டிவரும். ஆதலால் முன்யோசனை செய்யுங்கள். நன்மைநாடுவோன்.

பஞ்சமரை ஆதரித்தல்.

ப்ரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரரான வுயர்குலத்தார், பஞ்சமரை அநாதரவுசெய்து துன்பப்படுத்தி யாதொருசுகமும் பெறவொட்டாமல் செய்துவருகின்றார்கள். அதனால் அவர்கள் மனம் வெறுத்துக்கொண்டு பாதிரிகள் போதனைக் கிணங்கிக் கிறிஸ்தவராகின்றார்கள். இவர்களில் வெகுபேர் வெள்ளைக்காரர் போல் நடை யுடை பாவனை யுடையவர்களாகி, மாசம் 1000. 2000. சம்பளம் பெற்றும் பெரிய பெரிய வர்த்தகம் செய்தும் எவ்வளவோ மேன்மைபெற்று மகா பலசாலிகளாகி உயர்ந்த அந்தஸ்திலிருக்கின்றார்கள். இதுநிற்க, இந்துக்களோ சாதுக்கள்; பலமில்லாதவர்கள்; ஆதலால் புறமதஸ்தரால் அடிக்கடி துன்பப்படுகின்றார்கள். அப்படிப்பட்ட காலத்தில் பிராணனைத் துரும்பாய் நினைத்து எதிரிகளை வென்று இந்துக்களைக் காப்பாற்றுகின்றவர் அப்பஞ்சமர்களே. அப்படிப்பட்ட வுபகாரம் செய்யும் பஞ்சமரெல்லாம் கிறிஸ்தவராய்விட்டால், பிறகு நம்மைக் காப்பாற்றுகின்றவர் யார்? அன்றிப் பஞ்சமர் கிறிஸ்தவராய்விட்டால் பிறகு நமக்கு சத்துருக்களாகவும் ஆகின்றார்கள். மலையாளத்தில் நம்பூரிப்பிராமணர், தீயர்முதலிய தாழ்ந்தசாதியாரைப் படுத்தும் பாடு இவ்வளவ்வளவல்ல. அவர்கள் வீதியில் வரப்படாதாம்; பிராமணரோடு நேரில் பேசப்படாதாம்; துலுக்கனிடம்பேசினால் துலுக்கன் தீயனிடம் பேசுவதாம்; துலுக்கர்களோ, கலககாலத்தில் மாட்டுக்கறியை பிராமணர்கள்வாயில் திணித்து அடித்து உதைத்துக் கொன்று தம்மதமாக்குகின்றவர்கள். அக்காலத்தில் துலுக்கர்களோடு சண்டைசெய்து பிராமணரைக் காப்பாற்றுகிறவர்கள் அத் தீயர்களே. அத்தீயர்களிப்போது தெருவில் வரப்படாது; அவர்களோடு பிராமணர்கள் நேரில் பேசவும் படாது. தீயர்கள், துலுக்கராய்விட்டால் வீதியில் வரலாம்; பிராமணருடன் பேசலாம். அந்தவுபத்திரவம் சகிக்காமல் தீயர்முதலானவர்களில் அநேகர் துலுக்கராகவும் கிறிஸ்தவராகவும் ஆய்விட்டார்கள். சிலநாளைக்குமுன் இருபதினாயிரம் தீயர்கள், பிராமணர்களால்படும் தொந்தரவையும் அவமானத்தையும் சகியாமல் கிறிஸ்தவராகப்போய், சில விவேகிகளால் தடுக்கப்பட்டார்கள். தீயர்கள், சம்ஸ்கிருதம் மலையாளம் இவற்றில் வல்லவர்களாயும் நல்லொழுக்கமுள்ளவர்களாயும் தனவந்தர்களாயு மிருக்கின்றார்கள். இருந்தும் பயனில்லை. லக்ஷாதிபதியான தீயர்களிவ்வண்ணமாக, இவர்களிடத்தில் வேலைசெய்யும் அற்பனான தீயன், துலுக்கனாகவும் கிறிஸ்தவனாகவு மாய்விட்டால் அவன் எல்லாவிதத்திலும் சிறப்படைகின்றான். லக்ஷாதிபதியான தீயன் வாகனங்களேறப்படாது. இவர்களிடத்தில் தோட்டிவேலை செய்யும் துலுக்கன், கிறிஸ்தவன் [முன்பு தீயனாயிருந்தவன்] ஆனைமேல் அம்பாரிபோட்டுப் பிராமணர்வீதியில் வரலாம். இது என்ன வெட்கக்கேடு? தீயர்களா யிருக்கும்வரையில் துக்கமே அனுபவிக்கவேண்டும். துலுக்கனாகவும் கிறிஸ்தவனாகவும் ஆய்விட்டால் எல்லாச் சுகமும் பெறலாம். இப்படியானால் தீயர்களெல்லாம் நமது மதத்தைவிட்டு அந்நியமதத்திற்குப் போவார்களல்லவா! நாமே அவர்களை அந்நியமதத்திற்கு அனுப்பிவிடுவதாகவல்லவோ விருக்கின்றது? தீயர்களெல்லாம் அந்நியமதத்திற்குச் சென்றால் அந்நியமதத்திற்குப் பலம் அதிகமும் நமக்கு அதிக பலவீனமு

ம் உண்டாகுமன்றோ! பிறகு, அந்நியரால் கலகமுண்டாகும்போது அவர்கள் பலாத்காரத்தால் பிராமணர்கள் மாட்டுக்கறி, பன்றிக்கறியையும் தின்று துலுக்கராகவும் கிறிஸ்தவராகவும் ஆகவேண்டுமே. இவ்வளவு பரியாலோசனையில்லாத நமபூரிப் பிராமணர்களைத் தேசத்துரோகிகளென்றும் மதத்துரோகிகளென்றும் இவர்களால் இதரஜாதி யிந்துமதஸ்தர்களும் அந்நியமதத்திற்குச் செல்லவேண்டிவருகின்றதென்றும் சொல்லலாமன்றோ! இதுநிற்க, இனி யெடுத்தவிஷயத்தைப் பேசுவாம். பாதிரிகள், நாம் பஞ்சமர்க்குச் செய்யும் கொடுமைகளையெல்லாம் காட்டி, கிறிஸ்தவரானால் சுகப்படலாமென்று போதித்து, வெகு பஞ்சமரைக் கிறிஸ்தவராக்கினார்கள். சில வருஷங்களுக்குமுன் திருவையாற்றில் நமது சுவாமியைப் போகவொட்டாமல் தடுத்துச் சண்டைக்குவந்தவர்கள் ஷை பஞ்சமரான கிறிஸ்தவர்களல்லவா! பறைச்சேரியில் பாதிரிகள் புகுந்து கோவில்கட்டிப் பஞ்சமரைக் கிறிஸ்தவராக்குவதை நம்மவர்கள் பார்த்தும் எனக்கென்ன வுனக்கென்னவென் றிருந்துவிடுகிறார்களே. நாளை அவர்களே நமது வாயில் மாட்டுக்கறியைத் துறுத்து, “பைபிலை நம்புகின்றையா, அல்லது வாளுக்கிரையாகின்றையா” வென்று கேட்கப்போகின்றார்களே. பாதிரிகள் சாதுவேஷம் தரித்துப் பூனைபோலொடுங்கிக் காரியத்தை முடிப்பது எதற்கு? நாளை அவர்களைக்கொண்டே நம்மைக் கிறிஸ்தவராக்கவல்லவா! நாம் மதோன்மத்தரா யிருக்கின்றோமன்றி, நாளை நமது ஜாதி மதம் என்ன கதியாகுமென்று யோசிக்கவில்லையே! பாதிரிகள் சூதைக் கண்டுபிடியாமல் “வெளுத்ததெல்லாம் பால், கறுத்ததெல்லாம் நீர்” என்றிருந்தோமானால் ஒரேகாலத்தில் பஞ்சமராய்க் கிறிஸ்துமதத்தை அனுசரிப்போமே! ஆதலால் பஞ்சமரை ஆதரித்து, அவர்களுக்குக் கல்வி கற்பித்து மதத்தைப்போதித்து இகபரசுகத்தை யடையச்செய்வோமாக. அவ்வாறு செய்வோமானால் பஞ்சமர், பாதிரிகளைப் பறைச்சேரிக்குள்ளும் நுழைய இடங்கொடாமல் கிறிஸ்துமதத்தைக் கண்டித்து நமது மதத்தை ஸ்தாபிப்பார்கள். பஞ்சமராலேயே கிறிஸ்துமதம் கண்டிக்கப்படுமானால் மற்றவர்களிடத்தில் தலைகாட்டுமோ!

விவேகிகளே!

மகம்மதுமதம், கிறிஸ்துமதம், ப்ரம்மசமாஜமதம், நாஸ்திகமதமுதலிய அந்நியமதங்கள் ஓங்கி வளர்கின்றன; ஷை மதங்களுக்குரிய துராசாரங்களும் பலப்படுகின்றன; அரசும் அந்தச் சார்பிலேயே யிருக்கின்றது; நம்மவர்களும் நமது மதத்தை யாராயாமல் அவர்கள் மாதிரியே நடக்கின்றார்கள். இப்படிப்பட்ட காலத்தில் நமது வருணாசிரமதருமங்கள் நிலைக்கமாட்டா. ஆனாலும் விடவும் கூடாது. முற்றும அனுசரிக்க முடியவுமாட்டாது. காலதேச வர்த்தமானங்களை அறிந்து போகவேண்டும். இலௌகிகஞானமின்றி முழு வைதிகத்தையே அனுசரிப்போமானால் இகபர சுகங்கள் முற்றுமே யிழந்து, அந்நியமதஸ்தர்க்கு ஊழியக்காரர்களாகி, அவர்கள்வார்க்கும் கஞ்சியைக்குடித்து, மாடுபோலுழைத்து, அந்நியமதஸ்தராவோம். சமுசயமில்லை.

நன்மை நாடுவோன்.

ஓர் நண்பர்க்கு மறுப்புக்கூறுதல்.

சென்ற செப்டம்பர்மீ 30-உ “ப்ரம்மவித்தியா” பத்திரிகையின் அனுபந்தம் பின்பக்கத்தில் “ஓர்நண்பன்” எனக் கையொப்பமிட்ட நமதன்பர் விஷயமொன்று வரைந்தனர். அது சென்னை “வேதாந்தவிசாரணைசபையார்” “கிறிஸ்துமதஸ்தரைக்கேட்கும் வினாக்கள்” என்று அச்சிட்டு வெளியாக்கிய சிறுபத்திரத்திற்கு விடையெனத் தெரிந்து அதிலுள்ள குற்றங்களை விளக்கிக்காட்டத் தொடங்கினும்.

அச்சபையார் உலகம் சத்தா? அசத்தா? சதசத்தா?,, என்று கேட்டதற்கு விடை “உலகம் சத்துத்தான் வேறல்ல. சத்துக்கு நித்தியமில்லை. சித்துக்[illegible]தான் நித்தியமுண்டு,, என்றார்.

“உலகம் சத்துத்தான் வேறல்ல,, என்பதில் வேறு அசத்தாதலால் “வேறல்ல,, வென்பது அசத்தல்லவென்றே துணியப்படுவதுமன்றி, உலகம சத்தென்றே காட்டப்படுகின்றது. சிருஷ்டிக்கு முன்னர் உலகமுளதா யிலதாவென வாயுமிடத்து, சிருஷ்டியான அன்றே உலகமுண்டாயினமையின், அதற்குமுன் னின்றெனப சவர்க்கே யுடன்பாடாம். முன்பில்லாதவுலகம் அசத்தாதல்படும். அசத்து சத்தாவது யாங்ஙனம் அமையும்? அசத்து சத்தாவதும், சத்து அசத்தாவதும் ஓர் ஞான்றுமமையாவே. அசத்தான மலடிமகன் என்றுமசத்தாவனேயல்லாது சத்தாவனோ? சத்தாய மண் உருவமாறினும் அசத்தாகக் காண்கின்றோமா?

சத்தென்பதற்குப் பொருளுள்ளது; அசத்தென்பதற்குப் பொருளில்லதாம். இல்லது உள்ளதாமா? உள்ளது இல்லதாமா? இதனை யுவமானத்தா லாராய்வாம். மண் உள்ளபொருள்; ஆகாயத்தாமரை யில்லாப் பொருள். மண் உருவமாறினும் பொருள் ஓர்காலத்தேனு மிலதாகாமற்போதலும், ஆகாயத்தாமரை ஓர்காலத்தேனு முளதாதலு மின்றே. இதனால் சத்து, என்று முளதென்பதும், அசத்து, என்று மிலதென்பதும் பெறப்பட்டன. இங்ஙனமே உலகம் சிருஷ்டிக்குமுன் அசத்தாயிருந்தது. ஆண்டு அசத்தாயிருந்தது யாங்ஙனம் சத்தாயிற்று? அசத்து அசத்தாவதேயன்றிச் சத்தாவது ஓர்போதுமின்றென்று உவமானத்தால் விளக்கிக்காட்டினோம். அன்றிக் கடமுண்டாக்க வேண்டுமாயின், மண்ணைக்கொண்டு குயவன் செய்கின்றான். அஃதாவது சொரூபபேதமே செய்கின்றான். இல்லதிலிருந்து உண்டாக்குகின்றானில்லை. இங்ஙனமே கிறிஸ்தவர் தொழும் கடவுள் எதை யெடுத்துக் காரியமான உலகத்தைச் சிருஷ்டித்தார்?

“சத்துக்கு நித்தியமில்லை” யெனக்கூறி, “சித்துக்கு நித்தியமுண்” டென்றார். சபையாருலகம் சதத்தா? அசத்தா? சதசத்தா? வென வினவினரேயல்லது நித்தியமா? அநித்தியமா? எனக் கேட்டாரில்லை. அன்றிச் சித்தைப்பற்றி வினவியதுமின்றே. சபையார் சத்தெனினும், அசத்தெனினும், சதசத்தெனினும் இன்னின்ன குற்றங்களுளவா மெனக்கூறியதை நியாயத்தா லிறையளவு மறுக்காது, வாளா சத்தென்றால் சத்தாய்விடுமோ? “சத்துக்கு நித்தியமில்லை, என்பது சபையார் வினாவிற்கு விடையன்றெனினும் நமது அன்பர்பொருட்டுச் சிறிது பரியாலோசிப்பாம். சத்துக்கு நித்தியமில்லை யென்றதனால் அசத்துக்கு நித்தியமெனப் பாரிசேஷ நியாயத்தால் கொள்ளுதல் கடனாம். “அசத்தைச்சுட்டி யாம் கூறவில்லை, சித்துக்கு நித்தியமுண்டு என்றுமாத்திர முரைத்தாம்,, என்பராயின் அது பொருந்திலது. “அண்ணன் அயோக்கியன், சிற்றப்பன் யோக்கியன்,, எனக் கூறுங்கால் சிற்றப்பன் யோக்கியனாயினும் தம்பி யோக்கியனென்பதையுங் காட்டுகின்றதன்றோ? அங்ஙனமே “சத்துக்கு நித்தியமில்லை,, எனக் கூறுங்கால் அசத்து நித்தியமாமென விளக்கிக்காட்டுகின்றதே. சத்துக்குப் பொருளுள்ளதும், அசத்துக் கில்லதுமாம். நித்தியமென்பதற்குப் பொருள் என்றும் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்] உள்ளதும், அநித்தியமென்பதற்கு முக்காலத்துமில்லதுமாம். இவ்வாறு நோக்கின் நண்பருரைத்தபிரகாரம் “உள்ளபொருள் முக்காலத்து மிலதென்றும், இல்லாப்பொருள் முக்காலத்து முளதென்றுமாகின்றன. முன்பு பொருளிருக்கின்றதெனக்கூறி, பின்பு அதையே முக்காலத்து மில்லையெனின் நேர் விரோதமன்றோ? புத்திரனுளனென முன்புரைத்துப் பின்னர் முப்போது மிலையெனல்போலன்றோ விருக்கின்றது?

“கடவுள் சத்தா? அசத்தா? சதசத்தா,, என்னு மிவ்வினாவுக்குச் சத்தென்றே “ஓர் நண்பர்,, விடைபகர்வாரென வெண்ணுகின்றனம். அங்ஙனம் கூறுங்கால் “சத்துக்கு நித்தியமில்லை,, என அவர் கூறியவாறு கடவுளுக்கே நித்தியத்துவமில்லையெனப் பகரவேண்டியதாகின்றது. இதுநிற்க,

“சித்துக்கு நித்தியமுண்டு,, என்றனர். முன்பு சத்துக்கு

நித்தியமில்லையென்றும், பின்பு சித்துக்கு நித்தியமுண்டென்றும் தீட்டியபதனுல் அவர்கருத்து சித்தைவிட சத்து வேறுமெனப் புலப்படுகின்றது. சத்தின்றிச் சித்து எப்படியிருக்கும்? ஓர் பொருளிருந்தன்றோ அதன்கண் சித்துளதாகவேண்டும்? அங்ஙனமின்றேல் சித்து சூனியத்தின்கணிகழவேண்டுமே. இதுநிற்க, "ஓர் நண்பர்,, கடவுள் சித்தென்று ஒத்துக்கொள்வர். அக்கடவுளிருந்தன்றோ அவரிடத்துச் சித்துளதாகவேண்டும்? இருத்தல் சத்தன்றோ? நாம் சற்று ஆழ்ந்து ஆலோசிக்குங்கால் எது சித்தோ, அது சத்தாகவே யிருத்தல்வேண்டுமன்றி அசத்தாக விருக்கப்படாதென்பது அனுபவமாய் விளங்கும். மலடிமகன் அசத்து; அவனிடத்துச் சித்துளதாதலின்றென்க. கடவுள் சத்து; அவரிடத்துச் சித்திருப்பது நியாயமேயாம். இதுகாறுங் கூறிவந்ததில் சத்துஞ் சித்து மொரேபொருளென விளங்கிற்று. சத்தும் சித்துமானவொரே பொருளின்கண் சத்துக்கு அவர்கூறிய இலக்கணப்பிரகாரம் நித்தியமிலதெனவும், சித்துக்கு நித்தியமுளதெனவும் பகரவேண்டும். ஓரேபொருள் நித்தியமாயும் அநித்தியமாயமியம்பல் குற்றமாம். மறுதலைப்பட்ட விரண்டு தருமம் ஒருபொருளின்கணிகழ்தலமையா. இருத்தலால் சத்தென்றும், அறிதலால் சித்தென்றும் கூறப்படும் கடவுள் என்றுமில்லாதவரொன்றும், என்று முள்ளவரொன்றும் பேசுதல் மரபாமா? இதுநிற்க,

"ஒருகாலத்தி லுண்டாகியழிகிற வஸ்துவுக்கே சத்தென்றுபேர். சத்துண்டானுல் சத்தில்லையென்ற வுலகநடைமொழிகளைக் கவனிப்பதில் அந்த வசனப்பொருள் விளக்கும்" என்றார். "ஒருகாலத்திலுண்டாகியழிகிற வஸ்துவுக்கே,, என்பதில் "வஸ்துவுக்கே,, எனத் தேற்றேகாரந் தந்தமையால் அதற்கு எதிர்மறையாக முக்காலத்துள்ள பொருள் அசத்தெனத் தானுகவே விளக்கிக்காட்டுகின்றது. நண்டர், தங்கடவுளை முக்காலத்துமுள்ள பொருளென்றும், ஒருகாலத்துண்டாகியழிகின்ற தன்றென்றுஞ் சம்மதிப்பராகலின், அவரை அசத்தென்றே கூறுகின்றவராகின்றார். "சத்துண்டானுல் சத்தில்லையென்ற வுலகநடைமொழிகளைக் கவனிப்பதில் அந்த வசனப்பொருள் விளங்கும்,, என்றுவரைந்ததில் என்ன பொருள் விளங்குகின்றதோ, அது அவர்க்குத்தான் தெரியும்போலும்!

அவருடைய வாக்கியங்களில் குற்றங்கண்டுபிடிப்பது மணற்சோற்றில் கல்லாராய்வதுபோலாம். அதை வாசிப்பவரே யறிவர். ஆகலை விதுமட்டும் நிறுத்துகின்றும்.

பைபிலின் ஷெ விஷயங்களைப்பற்றிப் பேசாமையால் கிறிஸ்தவர் மனம்போனவாறு பேசுகின்றார்கள்.

உண்மையுரைப்போன்.

அறிவிப்பு.

இந்து டிராக்ட்ஸொஸைட்டி.

தாய் தந்தைகள் நெடுநாள் அருந்தவம்புரிந்து பெற்றெடுத்த பிள்ளைகளைப் பாதிரிகள் துர்ப்போதனைசெய்து வெகு சுலபமாய்க்கிறிஸ்தவராகின்றதைத் தடுக்கும்பொருட்டும், இந்துமதாபிவிர்த்தி செய்யும்பொருட்டும் 1887ஹு ஏப்ரல்மீ 27உ சென்னையில் இந்து டிராக்ட் ஸொஸைட்டியென ஓர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அதில் மெம்பராகச்சேர விருப்பமுள்ள உள்ளூரார்க்கும் வெளியூரார்க்கும் குறைந்தது சந்தா 1-4-0 இச்சங்கத்துக்குத் தருமமாகப் பொருளிபோர் அளிக்கலாம். இச்சங்கம் திரவியசகாயஞ்செய்யும் தாதாக்கள் கைகளையே நோக்குகின்றது. இந்துமதாபிமானிகள் ஒவ்வொருவரும் இதை ஆதரிக்கவேண்டும். இச்சங்கத்தில் தற்காலம் ஒவ்வொருதடவைக்கும் பதினாயிரம் வீதம் சிறு பத்திரங்கள் அச்சடித்து மெம்பர்களுக்கனுப்புவதோடு, கிறிஸ்தவரால் உபத்திரவமுண்டாகும் பலவூர்களிலும் அனுப்பி, இலவசமாகப் பரவச்செய்யப்படுகின்றன. இன்னும் அனேக காரியங்கள் செய்யவேண்டும். யாவும் பொருளாலேயே ஆகவேண்டியதென அறிந்தவிஷயமே. இதற்காக இந்து டிராக்ட் ஸொஸைட்டி தருமமென இங்கிலீஷ், தமிழ் தெலுங்கு இம்மூன்று பாஷைகளும் சேர்த்து அச்சிட்டு, ஸ்டாம்புடனே புத்தகங்கள் வெளிப்பட்டிருக்கின்றன. அதில் இஷ்டமான தொகைகையொப்பமிட்டு, பொக்கிஷதார் கையெழுத்திட்ட ரசீதினபேரில் ஏஜெண்டுகளிடத்திலாவது, பில்கலெக்டரிடத்திலாவது பணம் கொடுக்கவேண்டியது. மற்றப்படி யாரிடத்திலும் பணம் தரப்படாது.

இச்சங்கத்தைப்பற்றி யாதேனுமறிய விரும்புவோர் அரை அணா லேபிலாவது ரிப்ளைகார்ட்டாவது அனுப்பவேண்டியது.

௧௮௮௭ ஹு நவம்பர் மீ ௩0உ சென்னை	இங்ஙனம் பொன்னரங்கபிள்ளை. ஷெ சங்கத்தின் அக்கிராசனாதிபதி.

சிதம்பரம்

கஞ்சித்தொட்டி யாசகதர்மம்.

இஃது கும்பகோணம் நரசய்யரால் ஏற்படுத்தி நடத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இதன் உத்தேசம், வேலைசெய்யச் சக்தியற்ற கூன், குருடு, முடம் முதலிய ஜனங்களைக் கஞ்சி வார்த்து ரக்ஷிக்கவேண்டுமென்பதே. இது ஒரு பெரிய காரியமாயினும், தீனர்களிடம் தயவுள்ள கனவான்கள் உதவியிருந்தால் நிறைவேறுமென்பதற்கு ஐயமில்லை. உதவிசெய்ய விருப்பமுள்ளவர்கள் நெல், கம்பு, கேழ்வரகு, சோளம் முதலிய தானியங்களாகவாயினும், திரவியமாகவாயினும் சகாயஞ்செய்யப் பிரார்த்திக்கிறேன். இது நாளது மார்கழிமாசத்திற்குள் தயவு செய்து அனுப்பவேண்டும்.

C. S. நரசய்யர்,
கஞ்சித்தொட்டி யாசகர்
சிதம்பரம்.

விளம்பரம்.

சென்னை, மதராஸ் ரிப்பன்பிரஸில் விற்கும் புத்தகங்கள்.

	விலை.	தபாற்கூலி.		
	அணா	ரு	அ	பை
சர்வஜித்துவருஷத்திரிப்பன் பாக்கெட்பஞ்சாங்கம்.	௨	,,	௧	,,
கிறிஸ்துமதகண்டனம்.	௧	,,	,,	௨
ஜைனோபகாரம்.	௧	,,	,,	௨
மனுமறைகண்டவாசகம்.	௪	,,	௧	,,
மாதர்நீதி.	௨	,,	௧	,,

கையொப்பக்காரர்களுக்கு ஓர் முக்கிய அறிவிப்பு.

நமது கையொப்பநண்பர்களிற் சில கனவான்கள், பலமுறை கார்ட்டுகளனுப்பித் தெரிவித்தும் பத்திரிகைவாயிலாக அறிக்கைசெய்தும், சென்றவருஷத்துப் பாக்கியையேனும் அனுப்ப மனம் இசைந்திலர். இப்படி மௌனஞ்சாதித்தற்குக் காரணமேனும் அறிவித்திலர். அடிக்கடி அனுப்புங் கார்ட்டுகளையும், பத்திரிகைகளையும் மட்டில் ஏற்றுக்கொள்ளுகிறார்கள். பணமனுப்பும்விஷயத்தில்மட்டும் மனங்கொள்ளவில்லைப்போலும்! இவர் பரோபகாரத்தன்மை யிருந்தபடியென்னை! இப்படி இவர்கள் செய்வார்களாயின், பொதுநன்மை விருத்தியாவதெப்படி? அக்கனவான்கள் இனியேனும் சற்றே கண்விழித்துப்பார்த்து உடனே அனுப்பிவிடாதிருந்தால், அவர்களுடைய பெயரைப் பத்திரிகையில் வெளியாக்கப்படும்.

ப்ரஹ்மவித்யா.

ப்ரம்மவித்தியாபத்திரிகை

பிரதி இங்கிலீஷ்மீ௱ஸ௨தோறும் சிதம்பரத்திலிருந்து பிரசுரஞ்செய்யப்படும்.

வித்வத்விஜ்ஞாநஸமானதாயை ....*
யேப்ரஹ்மவித்யாஸக்தமானஸா: ....*
தேஷாமியம்ப்ரீதயேஸ்துஸாதரா ....*
ஸ்ரீப்ரஹ்மவித்யாப்ரணதாம்விரஸ்ய ....*

நிஷ்ப்ரத்யூஹஸ்த்ரிவேதோதகம் ....*
விசாராத்புத்ரமநோரதம் ....*
உதாத்தாசாரமாலாயாம் ....*
ஸர்வஸாம்ப்ரதாயிகவித்யா: ....*

விஷயா:	பத்ரஸங்க்யா
ஸ்ரீவர்ணமாலா	உ
உதக்ஸ்வப்னயோஜனம்ஸமாசாரா:	ச
பத்ரிகாஸம்பந்தவிஷய: ஸம்பாதகவிஜ்ஞாபனம்	எ
வேதஸூக்தம்	௰க
கேசிதப்ரஷ்டா:	௰உ
ஸாதாரணதர்மவித்யா:	௰ச
விஷயஸூசிகா	௰௫
விஷயவிவிதவிவரணம்	௰௬

வெண்பா

வித்தையெனவேயவித்தையைநாடிப்பிரம
வித்தையறியார்க்குவிளக்கமே—முற்றுமிக்க
விளங்குமுந்ததோர்பிரமவித்தையெனும்பத்திரமே
சங்கையின்றிவாழ்கதனித்து.

வத்துநிலைகாட்டுமொண்மெய்தும்பிரமவித்தை
மற்றையவித்தையெம்மட்டேகாண்—கற்றுணர்ந்தீர்
சொல்லீரயலைமிகச்சோதித்துமைக்காணில்
நல்லீரடைவீர்நலம்.

விஷயங்கள்	பக்கம்
ஸம்ஸ்கிருதபாஷை	2
மதமும், அதின் பிரயோசனமும், அதின் ஆசிரியரும்.	4
கடிதம் எழுதுவோர்க்கு அறிக்கை	7
நமது மதவிருத்தி	7
ஒற்றுமை	9
சில கேள்விகள்	10
சகோதர சிநேகமும், மாதா பிதாக்களிடம் பக்தியும்	13
ஸ்ரீசிதம்பர தர்மம்	14
சித்விலாசினி பாடசாலை	15

30-6-1886

Printed ,andPublished for the PROPRIETOR at the BRAHMAVIDYA press (*Chidambaram*)